# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 9 புதன்கிழமை (23-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:178


# புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து நாளை அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வு!

## பேச்சுக்கான முட்டுக்கட்டைகளை அகற்றுவது பற்றியும் பரிசீலனை

கொழும்பு,மே23

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள முட்டுகட்டை நிலையை நீக்குவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் நாளை வியாழக் கிழமை ஆராயவிருக்கின்றார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்நடவடிக்கையாக புலிகள் வலியுறுத்தி வரும் - அந்த இயக்கம் மீதான - தடை நீக்கம் தொடர்பான கோரிக்கை குறித்தும் நாளைய அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக முழு மூச்சாக முன்னெடுத்து வந்த முயற்சிகள் தற்சமயம் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளன.

எனினும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அர்வம்காட்டிவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது சிரேஷ்ட அமைச்சர்களுடன் இந்த விவகாரம் குறித்து தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார்.

அரசுக்கு எதிராக ஐ.தே. கட்சி கொண்டு வர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கும் விடயத்துக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவை பெறுவதற்காக புலிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா முழு ஆதரவு வழங்கும்

### அங்கு சென்ற சொல்ஹெய்மிடம் உறுதி

வாஷிங்டன்,மே23

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சை ஆரம்பிக்க நோர்வே அரசு மேற்கொண்டிருக்கும் முன்முயற்சிகளுக்கு பூரண ஆதரவும் ஊக்கமும் வழங்குவதாக அமெரிக்கா உறுதி அளித்துள்ளது.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வே வெளிவிவகார துணை அமைச்சர் ரேமண்ட் ஜோஹன்ஸ், இலங்கை விடயத்தில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கும் -

அமெரிக்க உள்துறைப் பிரதியமைச்சர் றிச்சேர்ட் அமிட்டேக்கும் - இடையில் இடம்பெற்ற பேச்சுக்களிலேயே அமெரிக்கத் தரப்பு இந்த உறுதிமொழியை அளித்துள்ளது.

இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தடங்கல், தடைகள் குறித்து நோர்வேத் தூதுக்குழு எடுத்து விளக்கியது.

நேரடிப் பேச்சுக்கான சூழ்நிலை உருவாக தம்மீது விதித்துள்ள தடையை இலங்கை அரசு நீக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று -

இலங்கை அரசு அதன் மீதான தடையை நீக்குவதற்கு அமெரிக்காவின் ஆதரவு இருக்குமா என்பது குறித்து அறிவதில் நோர்வேக்குழு கூடுதல் அக்கறை காட்டியதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

எனினும் இதுதொடர்பான விவரம் ஏதும் வெளியாகவில்லை.(க-3-6-9)

## இந்தியக் கப்பல் கொள்வனவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையினர் எதிர்ப்பு!

### ரெண்டரை ரத்துச் செய்ய ஆலோசனை

சென்னை,மே23

ஸ்ரீலங்கா கடற்படைக்கு என இந்தியாவிடம் இருந்து ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட கரையோர ரோந்துக் கப்பல் போன்று, இரண்டாவது கப்பல் ஒன்றையும் இந்தியாவிடம் இருந்து வாங்குவதற்கு ஸ்ரீலங்கா ஏற்கனவே இந்தியாவுக்குக் கொள்வனவுக் கட்டளை வழங்கியிருந்த போதிலும் -

அந்தக் கொள்வனவுக் கட்டளையை ரத்துச் செய்யுமாறு ஸ்ரீலங்கா அரசை அதன் கடற்படையின் ஒரு பிரிவினர் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'த ஹிண்டு' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சுமார் 170 கோடி ரூபா (2கோடி அமெரிக்க டொலர்) செலவில் 'ஐ.என்.எஸ்சரயு' என்ற பெயருடைய 'சுகன்யா' ரக போர்க் கப்பல் ஒன்றை கடந்த வருடம் இந்தியாவிடம் இருந்து கொள்வனவு செய்த ஸ்ரீலங்கா கடற்படை 'எஸ்.எல்.என்.எஸ். சயுரா' என்று பெயரிட்டுப் பயன்படுத்தத் தொடங்கியது.

இந்தப் போர்க்கப்பலை ஒரு 'வெள்ளை யானை' என்று வர்ணிக்கும் கடற்படை அதிகாரிகள் இதனை போர்முனைகளில் பயன்படுத்த முடியாது எனவும் கூறுகின்றனர்.

இதையடுத்தே, அடுத்த கட்டமாகக் கொள்வனவு செய்யப்படவுள்ள இதேரகப் போர்க் கப்பலுக்கான ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கடற்படை அதிகாரிகள் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். (உ-6)

## ஆள்களுக்கு எதிரான கண்ணியே திருமலை செயலகத்தில் வெடித்தது!

கொழும்பு,மே23

திருகோணமலை பிரடெரிக் கோட்டைக்குள் செயற்பட்டு வரும் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஆள்களுக்கு எதிரான கண்ணி ஒன்றே வெடித்துள்ளது என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செயலகத்தில் பணிபுரியும் சாரதி வெளியிலிருந்து கொண்டு வந்த ஆள்களுக்கெதிரான கண்ணியைப் பரிசோதித்தபோது அது வெடித்தது என்று தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-3)

## பஸ் விபத்து: கோப்ரல் பலி 100 பேர் காயம்

கொழும்பு,மே23

குருநாகல் - கண்டி பிரதான வீதியில் கிருபாகல என்ற இடத்தில் நேற்றுக் காலை இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இராணுவ கோப்ரல் ஒருவர் உயிரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை நகரில் கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு,மே23

கல்முனை நகரில் வாடிவீடு அமைந்துள்ள பகுதியில் நேற்றுக் காலை பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மஹிபாலவுக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லாப் பிரேரணை

### ஜே.வி.பி., கூட்டணி எம்.பிக்கள் ஆதரவு

கொழும்பு,மே23

மாவனல்லவில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியெனச் சந்தேகிக்கப்படும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் 20 எம்.பிக்களும் ஜேவி.பி. சார்பில் மூன்று எம்.பிக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றின் தலா ஒவ்வொரு எம்.பிக்களும் கைச்சாத்திட்டுள்ள அந்தப் பிரேரணை நேற்று நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் இன்று கூடுவதற்கு முன்னர் சபாநாயகர் தலைமையில் நடைபெறவிருக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் -

இந்தப் பிரேரணையை இன்று அல்லது வேறொரு திகதியில் நாடாளுமன்றத்தில் எடுப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-3)

## செம்மணி சடல எச்சங்களின் மரபணுச் சோதனை இந்தியாவில்!

கொழும்பு,மே23

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட சடலங்களின் எச்சங்களை மரபணுப்பரிசோதனைக்காக இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி கிரியல்ல இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

மரபணுப் பரிசோதனைக்காக சடலங்களின் எச்சங்களை லண்டனுக்கு எடுத்துச் செல்வதற்கு கூடுதல் செலவு ஏற்படும் என்பதால் அதற்கான நிதியுதவியை பாதுகாப்பு அமைச்சு வழங்கவில்லை என்று கூறப்பட்டிருந்தது.

அதேவேளை - இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படாததால் விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சடலங்களின் எச்சங்களை இந்தியாவுக்கு எடுத்துச் சென்று பரிசோதனை செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (க-3)

## அமைச்சர் டக்ளஸின் சந்திப்பை அடுத்து யாழ்.பல்கலைக்கு மேலதிக மாணவர் அனுமதிக்கு ஜனாதிபதி இணக்கம்

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மேலதிக மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ஈ.பி.டி.பி. விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்துக்கு திறமை அடிப்படையில் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அடுத்து -

அது குறித்து டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்றும் -

விசேட ஏற்பாட்டின் கீழ் கூடுதலான மாணவர்களை அனுமதிக்கும்படி அமைச்சர் கோரியிருந்தார் என்றும் -

அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் -

அந்தச் செய்திக்குறிப்பு மேலும் தெரிவித்தது. (ஐ-3)

## அதிகாரிகளை அனுப்பியதில் பாகுபாடு இல்லையாம்

### சிவில் நிர்வாக அதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம்,மே23

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் பங்குபற்றிய மாகாண, மத்திய அரசுகளின் உயரதிகாரிகளில் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் விமானம் மூலம் திரும்பிச் செல்ல முடியாது சிரமப்பட்டவர்கள் இன்று பயணம் செய்ய வாய்ப்பு இருப்பதாக, -

யாழ் சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

திங்கட்கிழமையன்று படையினரின் விமானச் சேவையில் எட்டுப் பேர்களை மட்டுமே அனுப்பமுடிந்தது என்றும் அவர்களில் 6 பேர் தமிழ் அதிகாரிகள் மிகுதி இரண்டு பேர் சிங்கள அதிகாரிகள் என்றும - சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேணல் பண்டார தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை படையினரின் விமானச் சேவையில் 13 அதிகாரிகளை அனுப்ப முடிந்தது. அவர்களில் 11 பேர் தமிழர்கள் என்றும் 2 பேர் சிங்களவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் குறை நிவர்த்தி சேவையில் பங்குபற்றிய அதிகாரிகளை அனுப்பியதில் இனப்பாகுபாடு எதுவும் காட்டப்படவில்லை. அவர்கள் யாவரும் இலங்கையர்கள் என்று கரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப் பொருள்கள்: அலுமாரி, கட்டில், செற்றி, ஸ்ரீல் அலுமாரி, மின்சாரப் பாவனைப் பொருள்கள் T.V. COLOUR, BLACK & WHITE போன்றவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- 101/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (88076)

கறவைப் பசு, சினைப் பசு, ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.ஜெகதீஸ்வரன், 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு. (88094)

ஒரு கைப்பாவனையிலுள்ள BAJAJ ஸ்கூட்டர் (பழைய மொடல்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 46/2, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி, 2ஆம் விதானையார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (88066)

### வீடு விற்பனைக்கு

யாழ்.இந்துக் கல்லூரி சிவலிங்கப் புளியடிக்கு அருகில் இரண்டு வீடுகள் அருகருகே விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 101/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (88077)

### குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா இன Broiler குஞ்சுகள் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 24-05-2001இல் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P.3529, 2867.** (88098)

### படிவம்

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II பிரிவு "ஆ" /தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரம்/தொழில்நுட்ப உத்தியோகத்தர் (III படவரைஞர்) பயிற்சித் தரங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் விற்பனையாகின்றன. நாயகபாலன், மானிப்பாய். (88109)

### ஊசி மருந்துகள்

நாய்களுக்குரிய Parvo, Distemper மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தியடி, நல்லூர். (88092)

### தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று 19-05-2001 அன்று முத்திரைச் சந்திக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் அல்லது கந்தர்மடம் பழம் வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து A.குகன், வாழைப்பழக் கடை, 811, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (சிவலிங்கப் புளியடி) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (88090)

நயினாதீவு அஞ்சலதிபர் கணபதிப்பிள்ளை குமாரசூரியர் (2ஆம் வட்டாரம் - நயினாதீவு) என்பவருடைய தேசிய அ.அ.(இல.471070432V) 20-05-2001 ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறை நிவிர்த்தி சேவையின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திற்கு அனுப்பி உதவவும். (88087)

ப.கிரிதரன் ஆகிய எனது விசேட அ.அட்டை (இல.090805818), பிரிகேட் பாஸ் என்பன வல்லைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறிரஞ்சன், வாசிகசாலை வீதி, புலோலி மேற்கு, புலோலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (88106)

### இறைச்சிக் கோழிகள் விற்பனை

Broiler, Cullbirds, இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) காலை 6.30 முதல் மாலை 6.30 வரை தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88093)

### விற்பனைக்கு

நெல்லியடி, திக்கம் றோட்டில் வதிரி உல்லையன் நல்லை அம்மன் கோயிலுக்கு அருகில், யாழ்.நெல்லியடி மெ.மி.த.கல்லவன் பாடசா... ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையார் வீட்டில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நவீனரக கல்யாணக் கூறைகள்; காஞ்சிபுரச் சேலைகள் கல்யாண, நடனமேக்கப்செற் மற்றும் பல. தொடர்பு: சு.சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி. (87969)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 - 02 - 1952

மறைவு 23 - 04 - 2001

### அமரர் நாகன் சத்திலிங்கம்

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வத்துக்கு
எமது இதய அஞ்சலி....

*உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கெருடாவில்,*
*வைரவர் கோயிலடி,*
*தொண்டமனாறு.*

பாசமிகு
*மனைவி:-* திருமதி ச.நாகம்மா,
*மகள்:-* ச.நளாயினி. (88111)

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 . 11 . 1920

மறைவு 08 . 05 . 2001

### திருமதி சிவமணி தம்பிஐயா

சீரார் விஷுவருஷம் சித்திரை ஐயைந்து செவ்வாய் பேரார் அபரப் பிரதமை - சேரனுஷம் தம்பிஐயாவின் மனையாள் சைவச்சிவமணி நம்பனடி சேர்ந்த திருநாள்.

*76/6, ஓட்டுமடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88104)

- குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 23 - 05 - 1926

உதிர்வு 22 - 05 - 1993

### வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(விவசாய நண்பன்)

**திதி: வைகாசி பூர்வபக்க பிரதமை 23.05.2001**

எட்டாத விண்ணுக்கு எமை மறந்து சென்று
எட்டாவது ஆண்டு ஆகியதே - கைதடி
வட்ட விவசாய நண்பனாய் வாழ்ந்த தங்களுடன் வாழ
கிட்டாத நிலையில் தவிக்கிறோம்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (C/16808)

*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

## நான்காவது பிறந்தநாள் வாழ்த்து



23-05-2001

**HAPPY BIRTHDAY**

செல்வி நிதர்ஷனா இராமேஸ்வரன்

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களான

**இராமேஸ்வரன் - சறோஜினி**

தம்பதிகளின் செல்வப் புதல்வி

# நிதர்ஷனா

தனது நான்காவது பிறந்தநாளை இன்று (23-05-2001) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். நிதர்ஷனாவை அன்பு அப்பா, அம்மா, தம்பி, அப்பம்மா, அம்மம்மா, வேவி அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அத்தைமார், சித்தப்பா, அண்ணன்மார், அண்ணிமார், அக்காமார், அத்தான்மார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (88095)

தகவல்:
செ. இராமேஸ்வரன், (கௌரி அழகு மாடம்)
*யாழ்ப்பாணம்.*

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

H A P P Y

B I R T H D A Y



புஷ்பராசா ஜதுஷன்

கைதடி கிழக்கைச் சேர்ந்த

**புஷ்பராசா - பேரின்பநாயகி**

தம்பதியரின் செல்வப்புதல்வன்

# ஜதுஷன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (23-05-2001) புதன்கிழமை லண்டனில் பெற்றோருடன் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை கைதடி அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், பெரியத்தை, பெரியமாமா, அண்ணாமார் (லண்டன், பிரான்ஸ்), அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், லண்டன் பெரியப்பா குடும்பம், மாமா குடும்பம், சுவிஸ் சின்னத்தை குடும்பம், சித்திமார், உற்றார், உறவினர் ஆகியோர் கைதடி வீரகத்திப் பிள்ளையார் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் நீடுழிவாழ வாழ்த்துகின்றனர்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(C/16807)

*ச.வரதராசா (பெரியப்பா)*
*நகரசபை, சாவகச்சேரி.*

# மரண அறிவித்தல்கள்

## கிட்டப்பா மணியம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டப்பா மணியம் அவர்கள் நேற்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி (மனோ) அவர்களின் அன்புக் கணவரும் றோகினிதேவி, குணராஜா, அருட்செல்வி, சதானந்தன், பத்மினி (புதுக்குடியிருப்பு), சுரேஸ்குமார், குமுதினி மோகன்ராஜ் (யா/ மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் மணி, மலர், மல்லிகா, யோகம்(ஹொலண்ட்), காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் வவா, சோதிலிங்கம், சோதியம்மா (ராணி), சிவாநிதி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23-5-2001) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் 6/12, விதானையார் லேன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ம சதானந்தன் (மகன்)

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (88118)

## திருமதி கார்த்திகேசு இராசம்மா

சாவகச்சேரி வடக்கு மடத்தடி கிழக்கு ஒழுங்கையை சேர்ந்த திருமதி கார்த்திகேசு இராசம்மா (20-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை(24-5-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் உரும்பிராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இலந்தைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. தர்மலிங்கம் (துரை)
(மருமகன்)

உரும்பிராய் வடக்கு,
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய். (88125)

## திருமதி கமலாம்பாள் ராமையாப்பிள்ளை

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி கமலாம்பாள் ராமையாப்பிள்ளை நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ராமையாப்பிள்ளையின் அன்பு மனைவியும் தர்மாவதியின் அன்புச் சகோதரியும் கோகிலம், சரோஜா, முருகானந்தம், எத்திர்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், முருகேசு கந்தையா, சீதாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதாம்பாள், ஜெபலட்சுமி, சுகுமாரன், வசந்தி, ஸ்ரீகந்தராஜ், நாகராஜ், கலாதேவி உமாதேவி, சந்திரகலா, ஸ்ரீ லட்சுமி பிரேம்குமார், சக்திவேல், பத்மநாதன், மனோராஜ், ராமஜெயம், மகேஷ், சுவர்ணா, கிருஷ்ணகுமாரி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சர்மிலா, சஜித், கிஸ்கின், துஷ்யந்தன், விதுர்சனா, வசிகரன், வித்தியாஷினி, ஷாம்பவி, மதுமிதா, சுஷந்தன், கோபிநாத், தட்சணா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-5-2001) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தின் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் (பாற்பண்ணை முன்பாக) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீகந்தராஜ்
(பேரன்)

164, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி (88124)

## திருமதி குமாரசாமி தெய்வானை

(பேராலை, பளை)

பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது புலோலி தெற்கில் வசித்தவருமாகிய திருமதி குமாரசாமி தெய்வானை நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்புமனைவியும் சுப்பிரமணியம், சண்முகம் (கனடா), குமாராணி, ஞானமலர், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி, செல்வராணி உலகநாதன், சேதுகாவலர், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-05-2001) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கோ. சேதுகாவலர்
(மருமகன்)
இலங்கை வங்கி 2ஆம் கிளை
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

புலோலி தெற்கு,
கொடிகாமம் றோட்,
மந்திகை,
புலோலி. (88127)

## ஆசிரிய மாணவர் சம்பளம்

யாழ்ப்பாணம், மே 23

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களின் இந்த மாதத்துக்கான சம்பளம் இன்று பிற்பகல் 3 மணி முதல் கலாசாலையில் வைத்து வழங்கப்படும் என்று கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (க-3)

## புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 23

தீவக கல்வி வலயத்தில் புத்தாயிரமாண்டு ஜி.சீ.ஈ. (உ/தர) மாணவர்களுக்கான ஜனாதிபதி 'சகச்சிர' புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 10.30 மணிக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில்வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி.குகேந்திரனும் கலந்து கொள்வர் (க-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 23

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் கசிப்புப் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு இன்று மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (க-3)


**லஷ்சுமி**
இணுவில்

சார்த்திக், லைலா, மனோரமா, தாமு நடிப்பில்

**ரோஜாவனம்**
(ரீலஸ்)

தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.00
(புதிய நேரம்)
27ஆம் திகதி மட்டும்
(சி-16818)

**நாகர்ஸ்**
சுன்னாகம்

எம். ஜி. ஆர்.
(இரு வேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார் நடித்த

**எங்கவீட்டுப்பிள்ளை**
(ரீலஸ்)

தினசரி: 11.00, 2.30
(புதிய நேரம்)
சனி, ஞாயிறு 6.00
(விசேட காட்சி)
(88116)

**ராஜா**
யாழ்ப்பாணம்

சரத்குமார், தேவயானி மற்றும் பலர் நடிப்பில்

**பாட்டாளி**

காட்சிகள்: 10.30, 2.30
(புதிய நேரம்)

25-05-2001 முதல்

**உன்னைக் கொடு என்னைத் தருவேன்**

காட்சிகள் தினசரி:
10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு:
10.30, 2.30, 5.00
(புதிய நேரம்)
(சி-16664)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர்

திரு. ஆ. சுப்பிரமணியம் அவர்களின்
அன்புத் தந்தையார்

### வேலுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்கள் 19-05-2001 சனிக்கிழமையன்று சிவபதம் அடைந்ததையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட மாணவர்கள்
முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,

(88119)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சந்தனராஜா

(சின்ராசன்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்தனராஜா நேத்று முன்தினம் (21-5-2001) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை நல்லம்மாவின் அன்பு மகனும் சின்னையா இலட்சுமியின் அருமை மருமகனும் பத்மாசனியின் அன்புக் கணவரும் சந்துருவின் பாசமிகு தந்தையும் சௌவுந்தராசா, சேனாதிராசா, பத்மராணி, செல்வராணி ஆகியோரின் சகோதரனும் சண்முகநாதன், செல்வரெத்தினம், சற்குணராஜா, சிவரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸ்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி சு. செல்லம்மா
(மாமியார்)

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு (88123)

## சபாரட்ணம் நடராசா

(முன்னாள் உதவி முகாமையாளர், வர்த்தக வங்கி)

அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சபாரட்ணம் நடராசா நேற்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சபாரட்ணம் - செல்லமுத்து ஆகியோரின் புதல்வரும் பார்வதியின் அன்புக் கணவரும் சோமஸ்கந்தராசா (போல்சன் இன்டஸ்றீஸ், கொழும்பு), நந்தினி (ஆசிரியை, யா/ அராலி சரஸ்வதி ம.வி), நிசதியகுமார் (பிறீமா கோப்பிரேசன், திருகோணமலை), நளினி (கனடா), இராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகா (டெல்மன் வைத்தியசாலை, கொழும்பு), ஜெயக்குமார் (அதிபர், யா/ தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), நவலட்சுமி (டாக்டர், ஆயுள்வேத வைத்தியசாலை, வெள்ளைமணல், திருகோணமலை), குலசிங்கம் (கனடா), இரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் டிலகசன், துபன், யகுலன், கஜானன் ஆகியோரின் பேரனாகும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 'அற்புதவாசா', அராலி வடக்கு இல்லத்தில் நாளை (24-05-2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந, பார்வதி (மனைவி)

அராலி வடக்கு,
அராலி. (88128)

## இளையதம்பி சுப்பிரமணியம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது புதுக்குடியிருப்பில் வசித்தவருமாகிய இளையதம்பி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருளம்மாவின் அன்புக் கணவரும் துவாரகாதேவி (U.K.) ஜெகநாதன் (ஜெகன் போட்டோ-யாழ்), காலஞ்சென்றமோகநாதன், யசோதரா (U.K.), காலஞ்சென்ற சுபலதா, சத்தியநாதன் (இந்தியா), சிவலோகநாதன், குகநேசன் (U.K.), மகிழ்நேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசாமி, லலிதாம்பிகை, பிறேம்குமார், குகமாலா (இந்தியா), ஆகியோரின் மாமனாரும் சிவசாயி (U.K.) சாம்பாணியல் (U.K.), பரணிதரன், பைரவி, விநோத் ஆகியோரின் பேரனும் பொன்னையா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானேஸ்வரி (இந்தியா), இராசம்மா, மகேஸ்வரி (கனடா), அருமலர், வேலும்மயிலும், அல்லிமலர் (இந்தியா), திரவியநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-5-2001) புதன்கிழமை புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஜெகன் (மகன்)

பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு. கோப்பாய்.

(சி/16815)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம் மாதம் 17 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(170125ஏ) (170125பி) (170125சி)
(170125டி) (176864ஏ) (187042ஏ)
(187042பி) (189332ஏ) (189333ஏ)
(189412ஏ) (189412பி) (190534ஏ)
(190534பி) (190548ஏ) (190589ஏ)
(190589பி) (191983ஏ) (192005ஏ)
(192006ஏ) (192035ஏ) (192035பி)
(192043ஏ) (192043பி) (192232ஏ)
(192233ஏ) (192233பி) (192245ஏ)
(192246ஏ) (192265ஏ) (192269ஏ)
(192269பி) (192335ஏ) (192340ஏ)
(192340பி) (192366ஏ) (192413ஏ)

**யாழ்ப்பாணம்**

(142884ஏ) (181077ஏ) (181911ஏ)
(184078ஏ) (188807ஏ) (188807பி)
(188807சி) (188867ஏ) (188955ஏ)
(188955பி) (188955சி) (189103ஏ)
(189204ஏ) (189204பி) (189291ஏ)
(189291பி) (189291சி) (189291டி)
(189657ஏ) (189663ஏ) (189663பி)
(189670ஏ) (189670பி) (189671ஏ)
(189676ஏ) (189676பி) (190766ஏ)
(190768ஏ) (190838ஏ) (190938பி)
(190938சி) (190941ஏ) (190964ஏ)
(191045ஏ) (191052ஏ) (191053ஏ)
(191056ஏ) (191109ஏ) (191119ஏ)
(191155ஏ)
(191155பி) (191174ஏ) (191174பி)
(191176ஏ) (191176பி) (191239ஏ)
(191239பி) (191239சி) (191243ஏ)
(193012ஏ) (193026ஏ) (193026பி)
(193044ஏ) (193068ஏ) (193069ஏ)
(193102ஏ) (193102பி) (193102சி)
(193102டி) (193102ஈ) (193115ஏ)
(193115பி) (193119பி) (193120ஏ)
(193120பி) (193122ஏ) (193134ஏ)
(193134பி) (193163ஏ) (193168ஏ)
(193169ஏ) (193169பி) (193173ஏ)
(193199ஏ) (193199பி) (193199சி)
(193201ஏ) (193202ஏ) (193202பி)
(193211ஏ) (193211பி) (193227ஏ)
(193227பி) (193231ஏ) (193231பி)
(193231சி) (193240ஏ) (193260ஏ)
(193262ஏ) (193262பி) (193262சி)
(193262டி) (193262ஈ) (193278ஏ)
(193281ஏ) (193281பி) (193289ஏ)
(193291ஏ) (193321ஏ) (193321பி)
(193328ஏ) (193346ஏ) (193377ஏ)
(193398ஏ) (193398பி) (193408ஏ)
(193408பி) (193431ஏ) (193431பி)
(193465ஏ) (193465பி) (193465சி)
(195165ஏ) (195165பி) (195165சி)
(195169ஏ) (195179ஏ) (195197ஏ)
(195206ஏ) (195214ஏ) (195227ஏ)
(195243ஏ) (195250ஏ) (195255ஏ)
(195267ஏ) (195272ஏ) (195272பி)
(195277ஏ) (195289ஏ) (195315ஏ)
(195356ஏ) (195363ஏ) (19673ஏ)
(198307ஏ) (198307பி) (198307சி)
(1ஏ) (1பி)

**கோப்பாய்**

(193259ஏ) (193259பி) (193354ஏ)

**நல்லூர்**

(186066ஏ) (186066பி) (188998ஏ)
(189071ஏ) (189071பி) (189250ஏ)
(189250பி) (190833ஏ) (190833பி)
(190960ஏ) (191106ஏ) (191111ஏ)
(191209ஏ) (191210ஏ) (191210பி)
(192241ஏ) (192241பி) (192241சி)
(193043ஏ) (193049ஏ) (193058ஏ)
(193058பி) (193058சி) (193058டி)
(193058ஈ) (193064ஏ) (193064பி)
(193087ஏ) (193094ஏ) (193094பி)
(193119ஏ) (193137ஏ) (193137பி)
(193144ஏ) (193147ஏ) (193147பி)
(193147சி) (193148ஏ) (193263ஏ)
(193263பி) (193263சி) (193263டி)
(193280ஏ) (193384ஏ) (193402ஏ)
(193403பி) (193403சி) (193410ஏ)
(193423ஏ) (193423பி) (193472ஏ)
(193474ஏ) (195153ஏ) (195153பி)
(195163ஏ) (195171ஏ) (195241ஏ)
(195319ஏ) (195326ஏ) (189952ஏ)
(190645ஏ) (191898ஏ) (192271ஏ)
(192443ஏ)

**சண்டிலிப்பாய்**

(179133ஏ) (179133பி) (179133சி)
(187172ஏ) (187172பி) (188754ஏ)
(191033பி) (191033சி) (191033டி)
(191033ஈ) (191933ஏ) (191961ஏ)
(191961பி) (191961சி) (191961டி)
(191967ஏ) (191967பி) (191985ஏ)
(191985பி) (192029ஏ) (192224ஏ)
(192230ஏ) (192260ஏ) (192260பி).
(192260சி) (192277ஏ) (192376ஏ)
(192376பி)

**தெல்லிப்பழை**

(184917ஏ) (184918ஏ) (191904ஏ)
(192198ஏ) (192305ஏ) (192308ஏ)
(192311ஏ) (192365ஏ)

**உடுவில்**

(186773ஏ) (189463ஏ) (189463பி)
(190503ஏ) (190669ஏ) (190669பி)
(191924ஏ) (191936ஏ) (191937ஏ)
(191959ஏ) (191959பி) (192191ஏ)
(192301ஏ) (192301பி) (192351ஏ)

18ஆம் திகதி வரை பயண அனுமதி பெற்றோர் விவரம்:-

**யாழ்ப்பாணம்**

(103244ஏ) (103244பி) (103244சி)
(103244டி) (178510ஏ) (181756ஏ)
(186256ஏ) (188872ஏ) (189023ஏ)
(189152ஏ) (189631ஏ) (189631பி)
(189658ஏ) (189659ஏ) (189659பி)
(189659சி) (189677ஏ) (189677பி)
(189677சி) (189677டி) (189681ஏ)
(189681பி) (189681சி) (189697ஏ)
(190879ஏ) (190879பி) (191120ஏ)
(191146ஏ) (191146பி) (191146சி)
(191146டி) (191204ஏ) (191213ஏ)
(191229ஏ) (191229பி) (191229சி)
(191229டி) (191229ஈ) (191244ஏ)
(191244பி) (192038ஏ) (192126ஏ)
(192126பி) (192126சி) (192126டி)
(192126ஈ) (192126எவ்) (192126ஜி)
(192126எச்) (192990ஏ) (192990பி)
(192990சி) (193035ஏ) (193035பி)
(193035சி) (193035டி) (193035ஈ)
(193048ஏ) (193048பி) (193074ஏ)
(193074பி) (193074சி) (193082ஏ)
(193082பி) (193082சி) (193116ஏ)
(193160ஏ) (193188ஏ) (193207ஏ)
(193219ஏ) (193235ஏ) (193252ஏ)
(193252பி) (193252சி) (193285ஏ)
(193285பி) (193285சி) (193286ஏ)
(193341ஏ) (193345ஏ) (193345பி)
(193347ஏ) (193347பி) (193349ஏ)
(193357ஏ) (193357பி) (193365ஏ)
(193365பி) (193390ஏ) (193413ஏ)
(193434ஏ) (193455ஏ) (193455பி)
(193455சி) (193464ஏ) (193487ஏ)
(193487பி) (19349[illegible]) (193492பி)
(193806ஏ) (1[illegible]6பி) (193806சி)
(193806டி) (193806ஈ) (195089ஏ)
(195165ஏ) (195165பி) (195225ஏ)
(195299ஏ) (195327ஏ) (195327பி)
(195327சி) (195332ஏ) (195340ஏ)
(195344ஏ) (195403ஏ) (195406ஏ)
(195406பி) (195409ஏ) (195453ஏ)

**கோப்பாய்**

(191212ஏ) (193195ஏ) (193195பி)
(193200ஏ) (193200பி) (193202ஏ)
(193202பி) (193205ஏ)

**நல்லூர்**

(180090ஏ) (184705ஏ) (184706ஏ)
(189270ஏ) (189278பி) (191096ஏ)
(191096பி) (191096சி) (191104ஏ)
(191104பி) (193052ஏ) (193052பி)
(193052சி) (193052டி) (193052ஈ)
(193097ஏ) (193097பி) (193171ஏ)
(193171பி) (193238ஏ) (193238பி)
(193238சி) (193295ஏ) (193295பி)
(193344ஏ) (193364ஏ) (193389ஏ)
(193389பி) (193389சி) (193389டி)
(193389ஈ) (193442ஏ) (193490ஏ)
(193490பி) (193490சி) (194360ஏ)
(195209ஏ) (195209பி) (195209சி)
(195209டி) (195280ஏ) (195345ஏ)

---


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. பொன்னையா சங்கரப்பிள்ளை

(சமாதான நீதிவான் - S.L.P.S. - 1)

(முன்னாள் அதிபர், யா/உடுத்துறை மகா வித்தியாலயம்)

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மகாவித்தியாலய முன்னாள் அதிபர் 'உயர்திரு.பொன்னையா சங்கரப்பிள்ளை அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தரத்திற்கு 01.06.1994 தொடக்கம் கல்வி அமைச்சினால் பதவிஉயர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கல்வியுலகில் கடந்த பல வருடங்களாக ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி இறுதியில் யா/மருதங்கேணி இந்து வித்தியாலயம், யா/உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், இவ்விரு வித்தியாலயங்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து அப்பகுதிப் பெற்றோர் நலன்விரும்பிகள், மாணவர்களின் பாராட்டைப் பெற்றவர்.

பல சமூக, சமய கூட்டுறவு அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகிக்கும் இவர் வடமராட்சி கிழக்கில் முதலாம் தர அதிபராக முதன் முதலாகப் பதவி உயர்வு பெற்ற பெருமைக்குரிய இவரது சமூக, சமய கூட்டுறவுப் பணிகள் மேலும் தொடரவேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மருதங்கேணி,*
*வடமராட்சி கிழக்கு.* (87901)

சேவைப் பிரியர்கள்,
*மருதங்கேணி, உடுத்துறை.*


---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 - 07 - 1944



ஆண்டவன் அடியில் 23 - 04 - 2001

அமரர்

### செல்லையா தங்கராசா (மாயவர்)

எங்கள் அன்பு அப்பாவே!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தாலென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தாலென்ன?
ஆறுதல்கூற இறைவன் வந்தாலென்ன?
அப்பா! உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது

*நீங்கள் என்றைக்கும் வழிகாட்டியாய் இருந்து வழிகாட்டிச் செல்லவும் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனை வேண்டுகின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ஒற்றுமையாய்க் கூடி வாழ்ந்திடத்தான் புத்தாண்டு பிறந்தது, ஆனால் இறைவா எங்களுக்கோ அன்புள்ள அப்பாவைக் கொண்டு செல்லவா வந்தது இப்புத்தாண்டு?*

எனது அன்புக் கணவரின் (23.04.2001) மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்டர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (23.05.2001) புதன்கிழமை எமது வீட்டில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (88062)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


---


## நெஞ்சம் சுமக்கும் ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 26 - 01 - 1936



உதிர்வு 03 - 06 - 2000

### திருமதி ருக்மணி வல்லிபுரநாதன்

ஆண்டொன்று ஓடி மறைந்திடினும் - அம்மா
உங்கள் அன்புமுகம் மறைந்திடுமா?
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் - உங்கள்
நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காதே அம்மா!
அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!
அன்புமுகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகியநாம்
இப்போது தூக்கம் இன்றித் துடிக்கின்றோம்
எத்தனையுகங்கள் மலரட்டும் - எம்
நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!
உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!

*உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*No.3, கந்தபுராண வீதி,*
*கந்தர்மடம்.* (88065)

- குடும்பத்தினர்


---


உ
சிவமயம்

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசி மாதம் 11 ஆம் திகதி (25.05.2001) வெள்ளிக்கிழமை சுக்கிலபக்ஷம் திருதியை திதியும் மிருகசீரிடம் நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுப நன்னாளில் காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் கடகலக்கினத்தில் அமைந்த சுபமுகூர்த்தத்தில்

கொக்குவில் மேற்கு
உயர்திரு. திருமதி நவரத்தினராசா
அவர்களின் சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**நாகதீசன் (ஈசன்)**
(ஜேர்மனி) அவர்களுக்கும்



யாழ்ப்பாணம், நல்லூர்
உயர்திரு. திருமதி நித்தியானந்தன் (புங்குடுதீவு)
அவர்களின் சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**நித்தியப்பிரியா (பிரியா)**
(இலங்கை) அவர்களுக்கும

இறைவன் திருவருள் கூடி திருமண நிகழ்ச்சி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அந்தத் திருமண வைபவம் பெமினா ஹோட்டல், காவேரி ஹோல் (மத்திய பேருந்து நிலையம் அருகில்) திருச்சியில் நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

இவ்வண்ணம்

திருமதி P.தவலட்சுமி நவரத்தினராசா,
திரு.திருமதி K.தவேந்திரன் (சுவிஸ்),
திரு. N.நாகரூபன் (கனடா),
செல்வி N.நாகமனோகரி (இந்தியா),
*இல. 9, 10 ஆவது கிராஸ், குமரன் நகர்,*
*திருச்சி 17, இந்தியா.*
*தொலைபேசி : 773478* (88069) (இது வீட்டார் அறிவிப்பு)

லயன் திரு.திருமதி நித்தியானந்தன் குடும்பம்,
*நியூ கல்யாணி நகையகம்,*
*87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*
நி.ஸ்ரீபிரியா, நி.ஜெயதர்சினி,
நி.கிசாந்த், நி.சுகன்யா,
*சிவபதி இல்லம், 68/2 இராசாவின்தோட்டம்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

# தி. மு. க. ஆட்சிக்கால ஊழல்; விசாரணைகள் ஆரம்பம்!

## முன்னாள் அமைச்சர்கள் கலக்கம்

சென்னை, மே 23

தி. மு. க. ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கொப்பரைத் தேங்காய் கொள்வனவு ஊழல் குறித்துத் தமிழகப் பொலீஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

அ. தி. மு. க. அரசு பதவியேற்றபின் நடத்தப்படும் இந்த முதல் ஊழல் விசாரணையால் தி.மு.கவின் முன்னாள் அமைச்சர்கள் கலக்கமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தி. மு. க. ஆட்சிக் காலத்தில் அகில இந்திய அளவில் கொப்பரைத் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்தது. இந்த விலை வீழ்ச்சியால் விவசாயிகள் நட்டமடையாமல் தடுக்க கொப்பரைத் தேங்காயை கிலோ ஒன்றுக்கு 32 ரூபா வீதம் மத்திய அரசு கொள்வனவு செய்ய முடிவு செய்தது.

இந்தக் கொள்வனவின் தமிழகத்தின் இடைத்தரகர்களாகச் செயல்பட்ட சிலர் ஒரு கிலோ கொப்பரைத் தேங்காயை விவசாயிகளிடம் 20 ரூபாவுக்கு வாங்கி அதனை 32 ரூபா 50 பைசாவுக்கு அரசுக்கு விற்றதாக விவசாயிகள் முறையிட்டிருந்தனர்.

இந்த மோசடியில் தி மு.க. அமைச்சர்கள் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக அப்போது தகவல்கள் கசிந்தன.

ஆனால், மேற்படி முறைப்பாடுகள் மீது எந்தவித நடவடிக்கைகளையும் தி. மு. க. அரசு எடுக்கவில்லை.

இதேசமயம், இந்த மோசடி குறித்து அ தி மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குரல் எழுப்பியிருந்தார்.

தற்போது அவர் முதலமைச்சர் ஆனவுடன் கொப்பரைத் தேங்காய் ஊழல் குறித்த விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளார். (ஒ)

## முதல்வர் தெரிவில் அதிருப்தி; பாண்டிச்சேரியில் பதற்றம்!

புதுவை, மே 23

பாண்டிச்சேரி முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியின் ப. சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, முன்னாள் முதல்வர் வைத்திலிங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சண்முகத்துக்கு எதிராக வைத்திலிங்கத்தின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதால் பாண்டிச்சேரியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மாநில காங்கிரஸ் தலைவர் நாராயணசாமியை வைத்திலிங்கத்தின் ஆதரவாளர்கள் தாக்கமுற்பட்டதாகவும் —

பொலீஸாரின் உதவியுடன் அவர் காப்பாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

## 12ஆவதுசட்டப்பேரவைக்கூட்டம்; கருணாநிதி பங்கேற்கவில்லை

சென்னை, மே 23

தமிழகத்தின் 12 ஆவது சட்டப் பேரவைநேற்று கூடியது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு, சபையின்மூத்த உறுப்பினரும், பேரவையின் தற்காலிகத் தலைவருமான அப்துல் லத்தீப் பதவிப்பிரமாணம்செய்து வைத்தார்.

தி.மு.க தலைவர் மு. கருணாநிதி நேற்று அவைக்கு வரவில்லை.

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் பதவிகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்களைஇன்று12மணிக்குள்தாக்கல் செய்யுமாறு அப்துல் லத்தீப் நேற்று அறிவித்தார்.

## பிரேசிலில் சிறையை உடைத்து ஆயுதக்குழு கைதிகளை மீட்டது

பிரேசிலியா, மே 23

பிரேசில் சிறைச்சாலை ஒன்றுக்குள் கடந்த வாரம் நுழைந்த ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று காவலர்களைத் தாக்கிவிட்டு அங்கிருந்த 27 கைதிகளை மீட்டனர்.

சம்பவதினத்தன்று கைதிகளைப் பார்வையிட உறவினர்கள் வரும் சமயத்தில் திடீரென்று சிறைக்குள் புகுந்த ஆயுதக் குழுவினரில் ஒரு பகுதியினர் அங்கிருந்த காவலர்களை சில மணித்தியாலங்கள் பணயக் கைதிகளாக வைத்திருந்ததாகவும்— அந்தச் சமயத்தில் மற்றொரு பகுதியினர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமது 27 சகாக்களை மீட்டதாகவும் — கூறப்படுகிறது.

பின்னர் அவர்கள் தயாராக இருந்த வாகனங்களில் தப்பிச் சென்றனர். அந்த வாகனங்களைப் பொலீஸார் விரட்டிச் சென்று தாக்கி தப்பிய கைதிகளில் 4 பேரை மட்டும் பிடித்தனர்.

உலகில் பாதுகாப்பற்ற சிறைச்சாலைகளில் பிரேசில் சிறைகளும் அடங்குகின்றன.

### மமதா மீது குற்றச்சாட்டு

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் தோல்வியடைந்ததுக்கு கட்சியின் தலைவர் மமதா பானர்ஜியே காரணம் என்று அதிருப்தியாளர்கள்குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஒ)

## காஞ்சி ஜெயேந்திரருக்கு சீன அரசு அழைப்பு

### மதத் தலைவரை அழைப்பது முதன்முறை

சென்னை, மே 23

தமிழகத்தின் காஞ்சிபுரத்தில உள்ள காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை சீனாவுக்கு வரும்படி சீன அரசு அழைப்புவிடுத்துள்ளது மதத் தலைவர் ஒருவரைத் தனது நாட்டுக்கு வர சீனா அழைப்பு விடுப்பது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.



சீன வெளியுறவு அமைச்சர் ஹுவாங் ஹுவா தலைமையிலான சர்வதேச நட்புறவுக்கான சீனச்சங்கம் விடுத்த இந்த அழைப்பை ஏற்று ஜெயேந்திர சுவாமிகள் தலைமையில் 15 பேர் அடங்கிய குழு எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சீனாவில் கலாசாரப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

தனது தேவைகளுக்கு கிணற்றில் இருந்து நேரடியாக அள்ளி எடுக்கப்பட்ட தண்ணீரையே உபயோகப்படுத்தும்; ஜெயேந்திரர், அத்தகைய ஆசார நெறிகளைச் சீனாவிலும் தீவிரமாகக் கடைப்பிடிக்க உள்ளதாகவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய 4 பேர் அடங்கிய குழு ஒன்று சீனா சென்றுள்ளதாகவும் காமகோடிபீட வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக கத்தோலிக்க மதத் தலைவரான பாப்பரசருக்கு சீனா இதுவரை அழைப்பு விடாதது குறிப்பிடத்தக்கது (ஒ)

## மேற்காசிய மோதலைத் தடுக்க உடனடி யுத்தநிறுத்தம் அவசியம்

### அமெரிக்க ஆணையம் வலியுறுத்து

வாஷிங்ரன், மே 23

மேற்காசிய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர உடனடியாக நிபந்தனைகளற்ற போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்க ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே கடந்த 8 மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல்கள் குறித்து ஆராய, கிளின்ரன் அமெரிக்க அதிபராக இருந்த போது ஓர் ஆணையத்தை அமைத்தார்.

முன்னாள் செனட்டர் ஜோர்ஜ் மிச்சல் தலைமையிலான அந்த ஆணையம் நேற்று முன்தினம் வெளியிட்ட ஆய்வறிக்கையிலேயே யுத்த நிறுத்தம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போர் நிறுத்தத்தை அடுத்து அமைதியான காலம் கடைப்பிடிக்கப்பட்டுப் பின்னர் அமைதிப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆணையம் எவர் மீதும் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர சில வழிவகைகளைச் சிபார்சு செய்துள்ளது.

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இஸ்ரேலியர்கள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை விலக்குவது மற்றும் யூதக் குடியேற்றங்கள் அமைப்பதை நிறுத்துவது என்பன அந்த வழிவகைகளில் அடங்கியுள்ளன.

மேற்படி அறிக்கையில் கூறப்பட்டிருப்பவற்றை நடைமுறைப்படுத்த அமெரிக்க வெளியுறவுத் துறையின் துணை அமைச்சர் மத்திய கிழக்குசெல்லவுள்ளார்.

இதேசமயம், மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் மிச்சல் ஆணைய அறிக்கையைப் பின்பற்ற வேண்டும் என்று ஐ. நா செயலாளர் நாயகம் கோபி அனான் கேட்டுள்ளார். (ஒ)

## பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலிய விமானத்தாக்குதல் குறித்து அமெரிக்கா கட்டுப்பாடு

வாஷிங்ரன், மே 23

பலஸ்தீனர்கள் மீதான தாக்குதல்களுக்கு எவ்- 16 ரகப் போர் விமானங்களை இஸ்ரேல் பயன்படுத்தக் கூடாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கத் துணை அதிபர் டிக்செனி இந்த அறிவித்தலை வெளியிட்டார்.

இஸ்ரேல் நகரான நெதன்யாவில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 5 இஸ்ரேலியர் பலியானதுக்குப் பதிலடியாக இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை விமானத் தாக்குதல்களை நடத்தியது. இதில் 12 பலஸ்தீனர்கள் இறந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து விமானத்தாக்குதலை நிறுத்துமாறு அறிவித்த டிக்செனி, இதனைவிட வேறு எதுவும் செய்ய முடியாதென்றும் தெரிவித்தார்.

இதிலிருந்து இஸ்ரேல் எவ்—16 ரக விமானங்களை பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலுக்குத் தொடர்ந்து பயன்படுத்தினாலும் அமெரிக்கா வெறும் கண்டனங்களை மட்டுமே விடுக்கும் என்று கருதப்படுகிறது.

### பங்களாதேஷ் செய்தியாளர் கொலை வழக்கு

டாக்கா, மே 23

பங்களாதேஷில் கடந்த ஆண்டு புலனாய்வுச் செய்தியாளர் சம்சூர் ரஹ்மான் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக 5 பத்திரிகையாளர்கள், ஓர் அரசியல்வாதி உட்பட 16 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் பா. ஜ. கட்சி எதிர்த்ததால் சமதாக்கட்சி அரசு கவிழ்ந்தது

புதுடில்லி, மே 23

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் சமதாக் கட்சி அரசு கவிழ்ந்தது. அந்த அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் தோழமைக் கட்சியான பா. ஜ கவின் உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்ததாலேயே சமாதக் கட்சி அரசு கவிழ்ந்தது.

ஆனாலும் மத்தியில் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்குச் சமதாக் கட்சி தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அக் கட்சியின் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் மாநில சட்டசபையில் பா. ஜ. க. ஆதரவுடன் சமதாக் கட்சி ஆட்சி அமைத்திருந்தது. சமீபத்தில் மணிப்பூர் மாநில காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் 18 பேர் பா ஜ கவில் இணைந்தனர்.

இந்த நிலையில் நம்பிக்கை வாக்கெடுப்பைச் சமதாக் கட்சி அரசு நடத்தியது.

கட்சித் தலைமையின் கட்டளையையும் மீறி அந்த வாக்கெடுப்பில் பா. ஜ. க. உறுப்பினர்கள் சமதாக்கட்சி அரசுக்கு எதிராக வாக்களித்ததால் அந்த அரசு கவிழ்ந்தது. (ஒ)

### தமிழ் இணைய மாநாடு

தமிழ் இணையத்தின் நான்காவது மாநாடு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற உள்ளது. (ஒ)

## தைவான் அதிபரின்பயணத்துக்கு சீன அரசு அனுமதி மறுப்பு

சீனாவில் நடைபெறும் ஆசிய, பசிபிக் பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள தாய்வான் அதிபர் சென் சுய்பியனுக்கு அனுமதியளிக்க சீன அரசு மறுத்துள்ளது

முன்னதாக மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் போது, சீன அதிபருடன் பேச்சு நடத்த சுய்பியன் விருப்பம் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஆசிய, பசுபிக் பொருளாதார மாநாட்டில் தாய்வானைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் அல்லது அமைச்சர் ஒருவர் மாத்திரமே பங்குபற்றலாம் என்ற நடைமுறை இருப்பதை சீன வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தைவான் சீனாவின் ஒரு பகுதி என்று வலியுறுத்தி, அதனை தம்முடன் இணைக்க வேண்டும் என்று சீன அரசு கோரி வருகிறது.

ஆனால் இதனை தைவான் நிராகரித்து வருகிறது. (ஒ).

## கலைஞர்கள் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், மே23

சுவிஸின் பேர்ண் நகரில் நடைபெறவுள்ள திருமறைக் கலாமன்றத்தின் சர்வதேசக் கிளைகள் நடத்தும் தமிழ் விழாவில் கலந்துகொள்வதற்கென யாழ்.திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் ஐந்து பேர் நேற்றுக் கொழும்பு பயணமாகினர்.

இவர்கள் அங்கு நடன, நாடக நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

(ம-7)

# வலி. வடக்குப் பகுதிகளில் நாளாந்தம் மின் வெட்டு

## மின்சார சபை நடவடிக்கையால் மக்கள் விசனம்

வலி.வடக்கு, மே23

மல்லாகம், தெல்லிப்பழை, ஏழாலை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக நாளாந்தம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தினமும் இரவு 7.15க்கு துண்டிக்கப்படும் மின்சாரம் மீண்டும் இரவு 9.00 மணிக்கே வழங்கப்பட்டு வருகின்றது.

மின்சாரசபை ஏற்கனவே அறிவித்திருந்ததைப் போன்று சுழற்சி முறையிலான மின்வெட்டு தமது பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படாததையிட்டு அப்பகுதிப் பொது மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு மகஜர்களை அனுப்பவும் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதேநேரம் -

மருதனார்மடம், மானிப்பாய், சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்குத் தற்போது 24 மணி நேர மின்விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-86)

## முகாமையாளர் / விற்பனை உதவியாளர் தேவை

அனுபவமும் திறமையும் கொண்ட முகாமையாளர், விற்பனை உதவியாளர் தேவை. 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தகுதி காண் சான்றிதழ்களுடன் உடன் நேரில் வரவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**யாழ். கண்ணாடி நிலையம்,**
இல. 234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(88086)

## நெஞ்சத்தை நெகிழ வைக்கும் 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 12 - 10 - 1986 | 23 - 05 - 1998 |

### தூ.போல் கஜேந்திரன்

(பரி. யோவான் கல்லூரி மாணவன்)

கண்மணியாய் உதித்த எம் குடும்ப ஒளிவிளக்கே!
கர்த்தரின் கிருபையுடன் கலைகள் பல படைத்த வித்தகனே!
சின்னஞ் சிறு வயதில் உன் புகழை மேலோங்க வைத்தவனே!
நெஞ்சத்தால் எமை நெகிழ வைத்துப் பரலோகம் சென்றாயோ
- போல் கஜேந்திரனே?

பிரிவால் துயருறும்:
**அம்மா, அப்பா, தங்கை, தம்பிமார்.**

*வே.தூயகுமாரன்,*
*பாதுகாப்பு சேவகர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(88078)

## The Jaffna Education Centre

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
(சாந்தி சினிமா முன்பாக, மேல் மாடியில்)

**Spoken English with Grammar**
சிங்களம்
**Shorthand, Typing**
இரு மொழி மூலமும் நடைபெறுகின்றன.

2002 / 2003 } A/L English


செவ்வாய் / வியாழன் } 4.30-5.30

புதிய பிரிவு ஆரம்பம்:
**26-05-2001**

Lectures By
***LOGANAYAKI***

(88089)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 05 - 1919 | 23 - 05 - 2000 |

### அமரர் குட்டிப்பிள்ளை சின்னையா கனகரெத்தினம்

திதி: 11.06.2001

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டு நீங்காது.

உமது பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சி.க.பாலசிங்கம்,
(கிராம சேவையாளர்)
*விதானையார் வீதி,*
*சண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(88081)

# மரண அறிவித்தல்கள்

## மரியாம்பிள்ளை விக்ரர்

(யாழ்.ஜெயம்)

யாழ்வாசரும், 67, வேம்படி வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான, இளைப்பாறிய ஆசிரியர் மரியாம்பிள்ளை விக்ரர்(யாழ்.ஜெயம்) நேற்று(22-05-2001) செவ்வாய்க்கிழமை அதிகாலை தமதில்லத்தில் காலமானார்.

இவரது நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி.

*67, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(88088)

## திருமதி பொன்னம்பலம் சிவபாக்கியம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் சிவபாக்கியம் நேற்று முன்தினம் 21.05.2001 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற, வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற செல்லப்பா - செல்லாச்சியின் அன்பு மருமகளும், செல்லப்பா பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினசபாபதி (கண்ணன் - நாவற்குழி), கலாநிதி (நோர்வே), சுபத்திரா தேவி (நாவற்குழி), ஈஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.05.2001) புதன்கிழமை இந்தியாவில், சென்னை நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பி.தர்மினி (பேர்த்தி)

நிரந்தர முகவரி:
*கேரதீவு வீதி,*
*நாவற்குழி,*
*கைதடி.*

தற்காலிக முகவரி:
*R.ராஜ்,*
*73, சங்கிலியன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(38101)

## திருமதி கந்தையா செல்லம்மா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மருதனார்மடத்தைத தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா நேற்று (22.05.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அம்பலம் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசதுரையின் சகோதரியும், தவமணி, இராசமனோகரன்(தபால் ஊழியர், தெல்லிப்பழை), சிறீஸ்கந்தராசா(சுவிஸ்), திருவதனி, சிறிரஞ்சன்(கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா, பவானி, தயா(சுவிஸ்), மகாதேவன்(சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S), சுரேகா (கொலண்ட்) ஆகியோரின் மாமியாரும், மயூரன், பிரிதா, சுவிதா, அஜந்தா, நிரோஷனா, சஜீவ், சுகர்னியா, அசோக்(சுவிஸ்), அட்ஷஜா (சுவிஸ்), அபிராஜ்(சுவிஸ்), ஜர்மிலன், ரேஜுஜன், சயூரன், துஷக்ஷின், சாருஜா (கொலண்ட்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-05-2001) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இராஜமனோகரன்(மகன்)
இ.சிவராசா(மருமகன்)

தற்காலிக முகவரி:
*பூமனை லேன்,*
*மருதனார்மடம்.*

நிரந்தர முகவரி:
*D.R.O லேன்,*
*தெல்லிப்பழை.*

(88099)

உ
வண்ணை வைத்தீஸ்வரன் துணை



# கௌரி அழகு மாடம்

**அகவை ஐந்தில்** அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் **கௌரி அழகுமாடம்** தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

- நவநாகரிக அலங்காரப் பொருள்கள்
- அழகுக்கு மெருகூட்டும் அழகு சாதனங்கள்
- நவீன டிசைன்களில் கண்கவர் கவரிங் நகைகள்
- இல்லத்தரசிகளின் எழில்மிகு எவர்சில்வர்ப் பாத்திரங்கள், அலுமினியப் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் பொருள்கள்
- தையல் அலங்காரத்துக்கான நூல் வகைகள், லேஸ் வகைகள், பட்டன் வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- பாக் (Bag) வகைகள், சூட்கேஸ் வகைகள், சுடுநீர்ப் போத்தல்கள் இன்னும் எத்தனையோ -

அத்தனை தெரிவுகளையும் குறைந்த விலையில் மொத்தமாக பெற்றிடப் யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்

## கௌரி அழகு மாடம்

**316, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P. 021-3227**

(88096)

# புகையிலையில் 'தவளைக் கண்' இலைப்புள்ளி நோய்த் தாக்கம்

யாழ்.குடாநாட்டு புகையிலைச் செய்கையாளர்களை அச்சுறுத்தும் ஒரு நோயாக தவளைக் கண் இலைப் புள்ளி நோய் (Frog-Eye leaf spot) காணப்படுகிறது. இந்த இலைப்புள்ளி நோய் புகையிலைப் பயிரின் இலையைக் காணமுடியாதவாறு தீவிரமடைந்துள்ளது. பொதுவாக முற்றிய, கீழுள்ள இலைகளில் இந்த இலைப் புள்ளி ஆரம்பத்தில் காணப்பட்டாலும் இலையை அறுவடை செய்யும் தருணத்தில் பயிர் முழுவதிலும் இந் நோயை உருவாக்கும் பூஞ்சணம் பரவி விடுகின்றது. பெரிய அளவிலான மண்ணிற உருவில் நடுவில் சாம்பல் நிறமுடையதாகக் காணப்படுவதால் இதற்கு 'தவளைக் கண்' இலைப் புள்ளி நோய் என அழைக்கப்படுகின்றது. இந்நோயின் தீவிரம் புகையிலைப் பயிரினது இனவகை மற்றும் சூழ லியல் காரணிகளிலும் தங்கியிருக்கிறது. தற்போது குடாநாட்டில் நில வும் அசாதாரண சூழல் நிலைமை இவ்வகை நோய்ப் பெருக்கத்திற்கும் பரம்பலுக்கும் அநுகூலமானதாகக் காணப்படுகின்றது.



புகையிலை இலையில் தவளைக் கண் புள்ளி நோயின் தீவிரத்தை அவதானியுங்கள்

இந்நோய் 'சேக்கொஸ்போறா' (Cercospora nicotianae) என்னும் ஒரு வகைப் பூஞ்சணத்தால் ஏற்படுகின்றது. நிலக்கடலையில் இலைப்புள்ளி நோய், மிளகாய் இலைப்புள்ளி நோய் என்பன இவ்வகை பூஞ்சணத்தால் ஏற்படுத்தப் படுவனவாகும். ஆனாலும் புகையி லைப் பயிரில் இலையினது பரப்பில் அதிகமாக இந்நோயின் தாக்கம் காணப்படுவதனால் இலையின் தரம் குறைந்து சந்தை விலை வெகுவாகக் குறைக்கப்பட ஏதுவாயமைந்து விடுகின்றது.

காற்று அதிகமாக வீசும் காலங் களில் இலைப்புள்ளி நோய் இலகு வாகப் பரவலடையும் வாய்ப்புக்கள் அதிகம். இப்பூஞ்சணத்தால் உருவாக் கப்படும் இலிங்கமில் வித்திகள் காற் றிலே இலகுவாக எடுத்துச் செல்லப் படக் கூடியனவாகும்.

நாற்று மேடையிலிருந்தே சிறந்த முறையில் நோய்க் கட்டப்பாட்டை மேற் கொள்வதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். இவை தவிர தொடர்ந்து புகையிலைப் பயிர்ச் செய் கையில் ஈடுபடும் வயற்பரப்புகளில் விடப்படும் தாவர மீதிகள் முற்று முழுதாக அகற்றப்பட்டு எரிக்கப்படல் அவசியமானதாகும். இவ்வாறு விடப் படும் தாவர மீதிகள் (முக்கியமாக அடிக்கட்டைகள் வரப்புகளில் விடப் படுவதைக் குறிப்பிடலாம்) தொடர்ந்து இந்நோயைக் காவிச் செல்ல வாய்ப்பானதாகி விடுகின் றன. பயிர்களை அடர்த்தியாக நடுத லும் தொடர்ச்சியான நீர்ப்பாசனமும் சிறந்த ஈரப்பதனுள்ள தன்மையை தாவரங்களுக்கிடையே ஏற்படுத்து வதனால் இந்நோய் இலகுவாக விருத்தியடையக் காரணமாகின்றது.

இந்நோயைக் கட்டுப்படுத்த செப்பு கொண்ட பங்கசு நாசினிகள் சிபாரசு செய்யப்பட்டுள்ள போதிலும் செப்புச் சல்பேற்றும் சுண்ணாம்பும் கலந்த போடோ கலவையை (கலக்கும் விதத் திற்கு உதயன் 11-05-2001 கமமும் புலமும் பகுதியைப் பார்க்கவும்) 2 தொடக்கம் 3 கிழமைக்கு ஒரு தடவை விசிறுவதன் மூலம் சிறந்த முறையில் கட்டுப்படுத்த முடியும். ★

**கு.மிகுந்தன்,**
*தலைவர்,*
*விவசாய உயிரியல் துறை,*
*விவசாய பீடம்.*

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# விவசாயிகளே! உங்கள் பிரச்சினைகள் என்ன?

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விவ சாயம் தொடர்பாகப் பலவேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு யாரை அல்லது எந்த நிறுவனத்தை அணுகவேண் டும் என்பது பற்றிப் பல விவசாயிகளுக்குத் தெரியா மல் இருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு விவசாயி தனது பிரச்சினைகள் தொடர்பாகத் தீர்வு காண்பதற்கு அணுகவேண்டிய நிறுவனங் களின் விவரம் வருமாறு:-



அன்னாசிப் பழம் என்றால் குடாநாட்டு மக்கள் தென்னி லங்கையையே நம்பி இருந்தது ஒரு காலம்.

இப்போது குடாநாட்டிலேயே அன்னாசிப் பழச்செய்கை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களிலும் அன்னாசிச் செய்கை வெற்றியளித்திருக்கிறது.

திருநெல்வேலி, உரும்பிராய், கோண்டாவில் மற்றும் சண்டி லிப்பாய் பகுதி விவசாயிகள் பலர் அன்னாசிச் செய்கையில் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

சண்டிலிப்பாய் மத்தி விவசாய சம்மேளனத் தலைவர் ஆ.கதிரவேலு என்பவரின் தோட்டத்தில் அன்னாசிச்செய்கை வெற்றியளித்துள்ளது. அங்கு காய்த்துள்ள அன்னாசிப் பழங் களைப் படத்தில் காணலாம்.

✪ *விவசாய உள்ளீடுகளைக் கொழும்பு விலையில் இங்கு பெற்றுக்கொள்வதற்கு:-* யாழ். மாவட்டச் செயலகம், கமநல சேவை கள் அபிவிருத்தித் திணைக்களம்.

✪ *சிறந்த தரமான விதையை உற் பத்தி செய்தல்:-* யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம், யாழ்.மாவட்டசெயலகம்.

✪ *பொருள்களைச் சந்தைப்படுத்தும் போது அநாவசியமான வரி விதித்தல் மற்றும் இடைத்தரகர்களின் இடையூறு:-* உள்ளூராட்சி ஆணையாளர், கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச சபைகள், விவசாயபீடம்.

✪ *பாதுகாப்பு படையினரிடம் உள்ள வயல் நிலங்களை அவர்களிடம் இருந்து மீளப்பெற்றுக் கொள்ளல்:-* மாவட்ட செய லகம்.

✪ *கட்டாக்காலிகளால் பயிர்கள் அழிக் கப்படுதல்:-* கமநல சேவைகள் அபிவிருத் தித் திணைக்களம், பிரதேச செயலகம், கிராம அலுவலர்.

✪ *பார்தீனியக் களையின் பரவலைத் தடுத்தலும் அழித்தலும்:-* விவசாயத் திணைக்களம், விவசாயபீடம்.

✪ *குடாநாட்டில் உள்ள பயன் தரும் மரங்கள் தறிக்கப்படுவதைத் தடுத்தல்:-* மாவட்ட செயலகம், பிரதேச செயலர், அரச மரக்கூட்டுத்தாபனம்.

✪ *மழை நீரைத் தேக்கி வைத்தல்:-* மாவட்ட செயலகம், நீர்ப்பாசனத் திணைக் களம், கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம்.

✪ *விவசாயம் சார்ந்த செய்திகளைப் பரப்புதல்:-* செய்தி ஊடகங்கள், பத்திரி கைகள், வானொலி.

இவ்வாறான நிறுவனங்களின் அவற்றின அதிகாரிகளை அணுகுவதன் மூலம் விவ சாயிகள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். ★

# திரும்பும் திசையெல்லாம் அரசுக்குத் 'தலையிடி'!

**இனப்பிரச்சினைக்கான தீர்வை, யுத்தத்தின் மூலமும் புலிகளை அழித்தும் காணலாம் என அரசியல்வாதிகளும் படை அதிகாரிகளும் நம்பியிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் அது சாத்தியமற்றது என நிரு பிக்கப்பட்ட பின்னரும் வேறு வழிகளைக் கையாளலாம் என் றால் திரும்பிய திசையெல்லாம் அரசுக்குத் தலையிடி. இது குறித்து "ராவய" 20-05-2001 சிங்கள வார இதழில் வெளி யான கட்டுரையின் தமிழாக் கத்தை இங்கு தருகிறோம்.**

அக்கினிச் சுவாலை இரா ணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் சமாதா னப் பேச்சுவார்த்தைகள் தொடர் பாக இருந்து வந்த கடும் நிபந் தனைகள் குறித்த கடும்போக்கை அரசாங்கம் கைவிடும் நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளது. சமாதா னப் பேச்சுக்களை ஆரம்பிப்ப தற்கு யுத்தநிறுத்தம் தேவை யற்றது என இதற்கு முன்னர் அரசாங்கம் தொடர்ந்து கூறி வந் தது. பேச்சுவார்த்தைகளை ஆரம் பித்து அதில் ஏதாவது முன்னேற் றம் காணப்பட்டால் மாத்திரமே யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட முடியும் எனவும் அரசு தெரிவித் தது.

**தமிழில்: கஜனி**

ஆனால் தற்போது யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை மேற் கொள்ளத் தயார் என அரசு கூறுகிறது.

கடந்த 9ஆம் திகதி நோர்வே நாட்டுச் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண் டனில் சந்தித்து உரையாடிய போது இவ்வாறு தெரிவித்தார்.

### புலிகளின் நிலைப்பாடு

இருப்பினும் விடுதலைப் புலி களின் உத்தியோகபூர்வமான கருத்தின் படி இரகசியமான அல்லது தற்காலிகமான யுத்த நிறுத்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை எனத் தெரிகிறது. தெளிவான - பகிரங் கமான யுத்தநிறுத்தமாகவே இருக்கவேண்டும் என்பதே விடு தலைப் புலிகளின் நிலைப்பாடா கும்.

இதைவிட, விடுதலைப் புலி கள் மேலும் இரு கோரிக்கை களை முன் வைத்துள்ளனர்.

## புலிகளுடன் பேசுவதற்காக படியிறங்க வேண்டிய நிர்ப்பந்தம்

அதாவது தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும்' மற்றும் பொருளாதா ரத் தடை முற்றிலுமாக நீக்கப் படவேண்டும் என்பனவே அவை யாகும்.

வலுவான நிலையில் பேச்சு வார்த்தைகளுக்குச் செல்ல வேண்டிய அரசு தற்போது மிக வும் பலவீனமான நிலை யில் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை களுக்குச் செல்ல முன்னர் தான் இழந்த ஆனையிறவுப் பிரதே சத்தை மீண்டும் கைப்பற்ற இரா ணுவம் முயற்சிகளை மேற் கொண்டபோதும் அந்த முயற்சி களைத் தோற்கடித்து அரச படைகளுக்குப் பாரிய இழப்பு களை ஏற்படுத்துவதில் விடுத லைப் புலிகள் வெற்றி கண்ட னர்.

### அரசியல் சிக்கலில் சிக்கித் தவிக்கும் அரசு

அதே சமயம் அரசு தெற்கி லும் அரசியல் சிக்கல்களில் சிக்கி பலவீனமான நிலையில் உள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அரசாங் கத்தை தோற்கடிக்கும் அச் சுறுத்தல் நிலை நிலவிவருகி றது. சமாதானப் பேச்சுவார்த்தை கள் மூலம் அந்த அச்சுறுத்தல் நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளிக்க முடிந்தாலும் உரிய முறையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளைக் கையாள்வ தில் அரசு வெற்றி பெறாவிடின் அரசு வேகமாக வீழ்ச்சியடை வதைத் தவிர்க்க முடியாது.

### ஆற்றலும் திடமும் இல்லாத நிலைமை

சர்வதேச அழுத்தம், போர் முனையில் அரச படைகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் மற் றும் நம்பிக்கையில்லாப் பிரே ரணை என்ற அச்சுறுத்தல் ஆகிய காரணங்களால் அரசு சமாதானப் பேச்சுகளுக்குத் தள்ளப்பட்டாலும் சமாதான நடவடிக்கைகளுக்கு கையாள்வதற்கான ஆற்றலும் திடமும் அரசுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை.

அரசு சமாதானப் பேச்சுக்க ளில் ஈடுபட்டால் மாத்திரமே தமிழ் அரசியல் கட்சிகளை, நம்பிக் கையில்லாப் பிரேரணைக்கு ஆத ரவு வழங்குவதைத் தடுக்க முடி யும். இருப்பினும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் முன்வைத்துள்ள முன் நிபந்தனைகளை நிறைவேற்றும் ஆற்றல் அரசுக்கு இல்லை.

பேச்சுவார்த்தைகளின் போது தங்களையும் ஒரு பங்காளிகளா கச் சேர்க்க வேண்டும் என முஸ் லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத் துள்ளது. இருப்பினும் விடுத லைப் புலிகள் தேவைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தேவை களுக்கும் இடையே பாரதூரமான இடைவெளிகள் உள்ளன.

ஆகக் குறைந்தது முக்கிய எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியை சமாதானப் பேச்சுவார்த்தைக ளில் பங்காளியாக்குவதற்கான தேவை நோர்வே, இந்தியா, அமெ ரிக்கா ஆகியன நாடுகளுக்கு இருப்பினும்-

ஐ.தே.கட்சி உண்மையான பங்காளியாகப் பங்குபற்றுவதாயின் ஐ.தே.க. கோரியுள்ள 4 ஆணைக் குழுக்களையும் அரசு நியமிக்க ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த நிபந்தனைகளையும் நிறைவேற் றும் ஆற்றல் அரசிடமில்லை.

இரு இனங்களுக்கிடையே வரலாற்று ரீதியான கருத்து வேறு பாடுகளை விட இரு முக்கிய கட்சிகளின் தலைவர்களிடையே நிலவும் ஒத்த கருத்தின்மையும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள வைரியமும் இந்தப் பேச்சுவார்த் தைகளைப் பாதிக்கும் காரணிக ளாக அமையும் எனக் கூறமுடி யும்.

விடுதலைப் புலிகள் தனது ஒரு கண்ணைக் கெடுத்ததுடன் தன்னைப் படுகொலை செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருவ தாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டி வருகிறார். இந்த அச்சுறுத்தல் பிரபாகரனுக்கும் பொருந்தும். இத் தகைய சந்தேகங்கள் (அச்சுறுத் தல்கள்) சமாதானப் பேச்சுக்கள் மீது நம்பகத்தன்மை இல்லாமற் போவதற்கும் முக்கிய காரணமாக அமைவதைத் தடுக்க முடியாது.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காண அதற்கான உகந்த சூழ்நிலையை உரு வாக்க வேண்டுமாயின் அரசு எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதி கரிக்குமே தவிர அதற்கு நிம்மதி ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. ★

## டிப்ளோமா ஆசிரியர் சங்கம்

# பட்டப்படிப்புக்கு வசதி செய்யுமாறு

# பல்கலை. துணைவேந்தருக்கு மகஜர்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய கற்கை நெறிகளில் பயிற்சி பெற்று, தற்போது குடாநாட்டில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவோருக்கு அவர்களின் துறைகளிலேயே வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ள வழி செய்யுமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினர் துணைவேந்தருக்கு அனுப்பியுள்ள மகஜரிலேயே இந்தக் கோரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:-

தேசிய கல்வியியற் கல்லூரித்திட்டம் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் படி எதிர்காலத்தில் இலங்கை ஆசிரியர் சேவையில் தொழில் தகைமையற்றவர்கள் எவரும் நியமிக்கப்பட மாட்டார்கள்.

ஆசிரியப் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் கற்கை நெறிகளை தேசிய கல்வியியற் கல்லூரிகள் மேற்கொள்கின்றன. இந்தக் கற்கைநெறிகளுக்கான இறுதித் தேர்வுகளை கல்வித் திணைக்களம் நடத்துகிறது. விஞ்ஞானம், கணிதம், ஆரம்பகல்வி, விவசாயம், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், நடனம், சமூகக்கல்வி உட்பட பல கற்கை நெறிகளில் 3 ஆண்டுகால வதிவிடப் பயிற்சிகளை கல்வியியற் கல்லூரிகள் வழங்கி வருகின்றன.

ஜி சி ஈ உயர்தரப் பரீட்சையில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலேயே தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தேசியக் கல்வியியற் கல்லூரிக்கான குறைந்த பட்சத் தகைமை, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளைவிட ஒன்றிரண்டு புள்ளிகள் மட்டுமே குறைவானதாகும்.

சில சமயங்களில் பல்கலைக்கழக அனுமதிகிடைத்தவர்கள் கூட தேசிய கல்வியியற் கல்லூரிகளில் சேர்கிறார்கள்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் ஆசிரியர்தரம் 3 — I இல் நியமிக்கப்படுகின்றார்கள்.

இலங்கை ஆசிரியர் சேவை விதிப்படி ஆசிரியரின் கல்வி மற்றும் தொழில் தகைமைகளின்படியே பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

டிப்ளோமாச் சான்றிதழ் பெற்ற ஆசிரியர் பின்னர் பட்டப் படிப்பை முடித்தால் தரம் 2 — IIக்குத் தரமுயர்த்தப்படுவார்கள். பட்டம்பெற்ற திகதியிலிருந்து இந்தத் தரவுயர்வு நடைமுறைக்கு வரும்.

விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றில் கல்வி மாணிப் பட்டப் படிப்பு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், கலைமாணிப் பட்டப்படிப்பு தேசிய கல்வி நிறுவனத்திலும் வழங்கப்படுகின்றன.

### விஞ்ஞான கணிதத்துறையினர் பாதிப்பு

கல்வியியற் கல்லூரிகளில் ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், நடனம் போன்ற பல்வேறு பிரிவுகளில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் தத்தமது துறைகளிலேயே யாழ் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது

துரதிர்ஷ்ட வசமாக, கல்வியியல் கல்லூரிகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய கற்கை நெறிகளில் பயிற்சி பெற்றவர்கள் மட்டும் தத்தமது துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையே நிலவுகிறது.

இதனால் — யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் ஒரே காரணத்தால் — விஞ்ஞான, கணித கற்கைநெறிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தத்தமது துறைகளில் உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பை இழந்து நிற்கின்றனர்.

ஆகவே, யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தராகிய தாங்கள், விஞ்ஞான, கணித கற்கை நெறிகளில் பயிற்சி பெற்றவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் அதே கற்கை நெறிகளில் கல்விமானி பட்டப்படிப்பை மேற்கொள்ள ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம் — என்றுள்ளது. (ஓ)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப்பணிப்பாளர்

திரு. வீ. இராசையா அவர்களின்

அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/சங்குவேலி அ. த. க. பாடசாலை

(88107)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக சமுர்த்தி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு. அ. ஜெயசிங்கம்
அவர்களின் பாசமிகு அன்னை

### திருமதி அழகரத்தினம் சின்னம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நலன்புரிச் சங்கம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
(வலி — கிழக்கு)
கோப்பாய்.

(88102)

## நன்றி நவில்கின்றோம்

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தைச் சூழவுள்ள வெளிப்பகுதியில் புதிதாகப் பல லட்சம் ரூபா செலவில வீதியை அமைத்துத் தந்தமைக்காக மனப்பூர்வமான நன்றியைப் பின்வருவோர்க்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு, வடக்கு-கிழக்கு இந்து கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர்)

### திரு. கா. வே. குகேந்திரன் (ஜெகன்) நா. உ.

(பிரதம அமைப்பாளர் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்டம்)

### திரு. க. மணிபல்லவராஜன்

(உதவி அமைப்பாளர் ஈ.பி.டி.பி. யாழ் மாவட்டம்)

### திரு. ந. திரிலோகநாதன்

(தலைவர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம் போஷகர், வலி. மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபை)

### வீதி திறப்புவிழா

மேற்படி வீதி இன்று 23—05—2001 புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு

திரு. கா. வே. குகேந்திரன் நா. உ. அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இவ் விழாவில் அம்பாள் அடியார்கள் யாவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலன சபை,
தொல்புரம் வழக்கம்பரை
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
வழக்கம்பரை, சுழிபுரம். (88103)

## தீக்குளிப்பு

புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் ஆலய முன்றிலில் தீக்குளிப்பு வைபவமும் இடம்பெறும் என விழா உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (ம-7-23)

## அரசாங்க ஊழியர்களுக்கான

# சம்பள அதிகரிப்பு சிபார்சுகள் ஜூனில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் அலவிமௌலானா கூறுகிறார்

கொழும்பு. மே 23

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பான சிபார்சுகளை முன்வைக்கும் பொருட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட குழு அதன் அறிக்கையை அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கவுள்ளது.

இக் குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் அரச ஊழியர்களுக்கு கிரமமான அடிப்படையில சம்பள அதிகரிப்பினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என தொழில் அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்திருப்பதால், இச்சிபார்சுகளின் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

தொழிற் சங்கவாதி திஸ்ஸதேவேந்திரா தலைமையிலான குழுவினர் கடந்த ஆறுமாதங்களாக அரசாங்கத் துறையினரின் சம்பள அதிகரிப்பு முறை குறித்தும், அதன் குறைபாடுகள், எதிர்காலச் சம்பளத்திட்டம் ஆகியன குறித்தும் விவரங்களைப்பெற்றுள்ளனர்.

— என்று அமைச்சர் அலவி மௌலானா மேலும் தெரிவித்தார். (ம-7)

## அ. அட்டையை பெறக் கோரிக்கை

யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த நாகராசா புஸ்பராஜேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (625794277V) சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் உள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு காரியாலய அதிகாரி தெரிவித்தார். (ம-10

சங்கானை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

## கேள்வி கோரல்

எமது சங்கத்தால் 7,000 வெற்றுச் சாக்குகளும் 3.000 வெற்றுப் பைகளுக்குமான கேள்வி எதிர்வரும் (26-05-2001) சனிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப் படும். கேள்விகோர விரும்புபவர்கள் மீளளிப்பு வைப்பாக ரூபா 1,000 செலுத்தி சங்க விநியோகப் படிவத்தில் கேள்வியைக் குறிப்பிட்டு, அரக்கு முத்திரையிட்டுச் சமர்ப்பிக்கவும்

பதில் பொது முகாமையாளர்.

(சி/16806)

## கண்ணீர் அஞ்சலி

வடபிராந்திய கால்நடை உற்பத்தி
சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்
டாக்டர் பொ. இராமநாதன்
அவர்களின் அன்புத தந்தையார்

### கந்தையா பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திணைக்கள ஊழியர்கள்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத்
திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(88105)

## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

கலைமாணி | வணிகமாணி
மற்றும் சிறப்புக் கலைமாணி - 1997

### பட்டச் சான்றிதழ்கள் வழங்கல்

1997 கலைமாணி, வணிகமாணி மற்றும் சிறப்புக் கலைமாணிப்பட்டச்சான்றிதழ்களை 25-05-2001 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் உரியவர்கள் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா 150/-, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தப்பட்டு, அதற்கான பற்றுச் சீட்டு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

— பதிவாளர்.
21-05-2001

(சி/16810)

# கிராமிய உழைப்பாளரின் குழந்தைகளை பராமரிக்கும் நிலையம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம்,மே23

கிராமிய உழைப்பாளர் குழந்தைகளின் நலன்கருதிப் பகல் நேரக் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தக் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தினை அமைப்பதற்கு உதவி வழங்குமாறு கோரி வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அரசியல் கட்சிகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிராமிய உழைக்கும் மக்கள், வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளமையால் மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருகிறார்கள். இதனால் எமது எதிர்காலச் சந்ததிகளான இவர்களது பிள்ளைகள் தகுந்த கல்வி அறிவினைப் பெறமுடியாமலும், அவசியமான போஷாக்கினைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் உள்ளனர்.

அதுமட்டுமன்றி இவர்கள் மிகவும் இலகுவில் சுகாதாரப் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டிய சிறு குழந்தைகளையும் வீட்டில் விட்டு விட்டுத் தாய் கூலி உழைப்பிற்குச் செல் [illegible] உள்ளது. இதனால் [illegible] தந்தையினரின் தகுந்த பராமரிப்பும் அரவணைப்பும் இல்லாமல் இக்குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் வாழுகின்றார்கள்.

கூலி உழைப்பில் ஈடுபடும் சில பெற்றோர்கள் பாடசாலைக்குச் செல்லும் இன்னொரு சிறுமியையோ சிறுவனையோ பாடசாலைக்குச் செல்வதைத் தடுத்து சிறு குழந்தைகளைப் பராமரிக்கச் செய்கின்றனர். இதனால் அந்தச் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. அத்துடன் தாயின் ஸ்தானத்திலிருந்து இச் சிறுவர்களால் குழந்தைகளை ஒழுங்காகக் கவனிக்கவும் முடிவதில்லை.

எமது நாட்டினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக நின்று உழைத்து ஓடாகத் தேய்கின்ற எம்மவரின் எதிர்காலச் சந்ததி இளந்தலைமுறையினர் இவ்வாறு ஆதரவற்ற நிலையிலும் தகுந்த பராமரிப்பற்ற நிலையிலும் வளர்வதை நாம் அனுமதிக்கமுடியாது.

எனவேதான் கிராமிய உழைப்பாளர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குரிய வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த மகத்தான சேவைக்குத் தாங்கள் பூரண ஒத்துழைப்பும் உதவிகளும் நல்குவீர்கள் எனக் கிராமிய உழைப்பாளர்கள் சார்பில் எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது.(ம-4)

# அரசு – புலிகள் பேச்சை எதிர்த்து ஆஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம்

## சிஹல உறுமய ஏற்பாட்டில் நடக்கும்

கொழும்பு,மே23

அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடக் கூடாது என்று வலியுறுத்தி சிஹல உறுமய கட்சி விரைவில் ஆஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இது தொடர்பான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்சியின் முக்கிய பிரதிநிதி ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சிஹல உறுமய கட்சியின் ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவர் என்றும் -

வெளிநாடுகள் பலவும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறவேண்டுமென வலியுறுத்தி வருவதை அடுத்தே வெளிநாடுகளில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் எழுதிய 'யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம்' எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-4)

### தமிழர்கள் அதிகம் வாழும் இடங்களிலுள்ள

# முக்கிய அரச அலுவலகங்களில் 500 தமிழ் எழுதுநர்கள் நியமனம்

## விரைவில் போட்டிப் பரீட்சை

கொழும்பு,மே23

தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்கள், திணைக்களங்களில தமிழ் தெரிந்த எழுதுநர்களை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாக, நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு அண்மையில் நாடு தழுவிய ரீதியில் நடத்திய கணிப்பீட்டில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ் தெரிந்த ஊழியர்கள் போதுமானளவு நியமிக்கப்படவில்லை என்பது தெரியவந்துளளது என அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதன் முதற்கட்டமாக 500 தமிழ பேசும் எழுதுநர்கள் முக்கிய அரச அலுவலகங்களில் நியமனம் செய்யப்படவுள்ளனர். இதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக பிரதேச செயலகங்களுக்கும் எழுதுநர்கள் நியமனம் செய்யப்படுவர்.

500 தமிழ் பேசும் எழுதுநர்களை அரச சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது. அது பற்றிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் - என்றார். (ம-7)



யாழ்.மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலுதவி மற்றும் வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சிகள் அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன.

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை மேலுள்ள படத்தில் காணலாம். யாழ்.மத்தியகல்லூரி அதிபர் க.இராஜதுரை, மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் இ.சற்குருநாதன், முதலுதவிப் பயிற்சி விரிவுரையாளர்களான என்.நக்கீரன், ப.சஞ்ஜீத்குமார் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

பயிற்சி நெறியில் கலந்துகொண்ட ஆசிரியர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ம-10)

## பரிசளிப்பு விழா

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ர.சோதிலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இன்றைய விழாவில் வைத்திய கலாநிதி ஆ.காந்தநேசன், வைத்திய கலாநிதி திருமதி ஆ.காந்தநேசன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-7-28)

## மரத்தால் வீழ்ந்து காயம்

பனை மரத்தில் ஓலை வெட்டிக் கொண்டிருந்த சமயம் ஓலைக்குள் இருந்த கருங்குளவிக்கூடு கலைந்து தாக்கத் தொடங்கியதனால் அவசரமாக மரத்தில் இருந்து இறங்க முயன்றவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை சமரபாகு என்னும் இடத்தில் இடம்பெற்றது.

வரணி அம்மாகடையடியைச் சேர்ந்த கட்டையன் கனகசிங்கம் (வயது 29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (ம-117)

# வாசகர் திருமுகம்

## உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க அதிபரின் முயற்சியால் வாய்ப்பு

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் பலர் தமக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை.

இதேவேளை அண்மையில் வெளியான வெட்டுப்புள்ளிகள் தொடர்பான விவரங்கள் இந்த மாணவர்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும், மனவிரக்தியையும் ஏற்படுத்திவிட்டன.

பல்கலைக்கழக அனுமதியும் இல்லை. இரண்டாவது தடவையாவது பரீட்சைக்குத் தோற்றுவோம் என்ற நிலையில் பெரும்பாலான மாணவர்கள் உள்ளனர். எனினும் இந்த மாணவர்களால் பரீட்சைக்குத் தோற்ற முடியாது. காரணம் அ[illegible]ள் இம்முறை பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை.

இன்னும் இரண்டு மாதங்களே பரீட்சைக்கு உள்ளன. இவ்வாறு மாணவர்கள் பலரும் அங்கலாய்த்துத் திரிவதை அடுத்து யாழ்.நகரில் உள்ள பிரபல தேசியப் பாடசாலை ஒன்றின் அதிபர் இதுகுறித்து பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டார். இதன் பலனாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் மாணவர்களது பரீட்சை விண்ணப்பங்களை ஏற்க பரீட்சை ஆணையாளர் சம்மதித்துள்ளார். எனவே ஏனைய பாடசாலை அதிபர்களும் தத்தமது மாணவர்களின் நன்மைகருதி - எதிர்காலம் கருதி இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

இதன் மூலம் தமது கடமையை - பொறுப்பை - அதிபர் பணியின் முக்கியத்துவத்தை அதிபர்கள் செய்யவேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

*நல்லூர்.* **கே.கரன்.**

## அஞ்சலகங்களில் மின் கட்டணம் செலுத்தமுடியாத நிலை ஏன்?

கடந்த 14ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் மின் கட்டணம் செலுத்தத் தவறியோரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்படும் என்று மின்சார சபை விளம்பரம் மூலம் அறிவித்திருந்தது.

விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளபடி மின்பட்டியலின் பின்புறத்தே கட்டணம் செலுத்தப்படாவிடின் என்ன நடக்கும் என்பது மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கட்டணங்கள் எங்கெங்கே செலுத்தப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டணம் செலுத்தப்படக்கூடிய இடங்களில் அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

ஆனால் யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரை அஞ்சல் அலுவலகங்களூடாக மின் பட்டியல்கள் சீர்செய்யப்படுதல் இற்றவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. பட்டியல்கள் வங்கிகள் மூலமே சீர் செய்யப்பட வேண்டியுள்ளது. ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்துக்குள் ஒருசில வங்கிக் கிளைகளில் காத்துநின்று பட்டியலினைத் தீர்ப்பதிலுள்ள சிரமம் சிறிதன்று.

வங்கிகள் இல்லாத இடங்களில் ஒரு வங்கிக் கிளையைச் சென்றடைய ஒரு முழு நாளையும் ரூபா நூறுக்குக் குறையாத பணத்தினையும் செலவிடவேண்டியுள்ளது. கிராமங்கள்தோறும் காணப்படும் அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களில் பட்டியலைத் தீர்க்கும் வசதி செய்யப்படின் ஆயிரக்கணக்கான பட்டியல்களின் கொடுப்பனவு விரைவுபடுத்தப்படும் என்பதை உணராது மின் துண்டிப்புப்பற்றி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை விந்தையானதே. பத்திரிகைகளில் இவ்விடயந் தொடர்பாக முன்னர் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

சில காலத்தின் முன் வேலணை அஞ்சலகத்தில் மின்பட்டியல் தீர்வு செய்யப்பட்டபோதும்; (பற்றுச்சீட்டு ஒன்று இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்தது) பின்னர் ஏனோ அது நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறு அஞ்சல் அலுவலகம் மூலம் தீர்க்கப்பட்ட பட்டியல் அடுத்தமாதப் பட்டியலிலேயே கழிக்கப்பட்டுள்ளமையையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஆனால் வங்கிகளில் கொடுப்பனவு செய்யப்படும்போது அதற்கும் கூடுதலான காலப்பகுதியிலேயே கணக்குகளுக்கு எடுக்கப்படுகின்றது.

இந்நிலையில் இரண்டு மாதங்களுக்குமேல் நிலுவையிருப்போரின் விநியோகம் துண்டிக்கப்படுமென்றால் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்தாத - பாரபட்சமான விநியோகத்தை மேற்கொள்ளும் மின்சாரசபை அலுவலர்கள் தவறான அறிக்கைகளோடு (கட்டணம் செலுத்தப்பட்டபோதும் அவை கணக்குக்கு எடுபடாமையால் காசு கட்டவில்லையென) வந்து மின்துண்டிப்பை மேற்கொள்ளும்போது வீட்டில் இருக்கும் பெண்கள், சிறுவர்கள், அறியாதோர் பணம் கட்டப்பட்டமையினை எவ்வாறு அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவது? உறுதிசெய்வது?

அஞ்சல் அலுவலகங்களில் மின்பட்டியல் தீர்வு செய்யப்படும்போது தனியான ஓர் அச்சிட்ட பற்றுச்சீட்டுப் பட்டியலின் முழுவிவரங்களோடு வழங்கப்படுகிறது. அத்துடன் அஞ்சலகத் திகதி முத்திரை தெளிவாகப் பொறிக்கப்படுகிறது. இப்பற்றுச்சீட்டை மட்டும் காட்டியே கொடுப்பனவை உறுதி செய்யலாம்.

எனவே மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த முதல் சீரான பாரபட்சமற்ற விநியோகத்தையும் அஞ்சல் அலுவலகங்களுடான கொடுப்பனவினையும் நடைமுறைப்படுத்த மின்சாரசபை உயர்பீடம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மின் பாவனையாளன் என்ற முறையில் இத்தால் தயவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

*வண்ணார்பண்ணை.* **ஒரு மின் பாவனையாளன்.**

## இவர்களைத் திருத்துவது யார்?

யாழ். நகரிலே பிரசித்திபெற்ற அம்மன் ஆலயங்களிலே ஒன்றுபற்றிய தகவல் இது. இவ்வாலயச் சுற்றாடல் பக்தியுடனும், புனிதமாகவும் பேணப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் இன்று அந்நிலைமாறி அங்கு ஒன்றுகூடுகின்ற சில இளைஞர் கூட்டம் அப்படியான புனித இடத்தை தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யும் இடமாக மாற்றியுள்ளது. இந்த இளைஞர் கூட்டமானது அவ்வாலய வீதியிலே நின்றுகொண்டு வீதியால் செல்பவர்களுடன் சேஷ்டை விடுவதுடன், விசிலடிப்பது போன்ற காரியங்களிலும் ஈடுபடுகின்றார்கள். இவர்களில் பலர் யாழ். நகரில் மதிப்புக்குரிய தொழில் செய்வோரின் பிள்ளைகள் என்பது கசப்பான உண்மை.

சென்ற வருடங்களிலே யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியரின் வீட்டுக்குச்சென்று அவரைத் தாக்கமுற்பட்டு, பொலீஸ்வரையும் சென்றவர்கள். அதைவிட இவர்கள் பத்துத் தினங்களுக்கு முன்பாக நல்லூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை ஆலய வீதியிலே வைத்து நான்குபேர் சேர்ந்து அடித்து அவரது கையையும் முறித்தனர். அன்று பின்னேரம் தாக்கப்பட்ட இளைஞன் தன் கூட்டத்தாருடன் ஆலயத்து சுற்றாடலிலே வந்து இவர்களுடன் கைகலப்பில் ஈடுபட்ட சமயம் இரு தரப்பினராலும் தூஷணவார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன. அது மட்டுமன்றி சென்ற மே தினம் அன்று இவ்விளைஞர் கூட்டம் நீராவியடியில் உள்ள சில இளைஞர்களுடன் கலவரப்பட்டு அவர்களால் நையப்புடைக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்.

இத்தகைய சமூகச் சீரழிவுச் செயல்கள் குடாநாடெங்கும் தொடர்கின்றன. அவற்றைத் தடுக்க முன்வரப்போவது யார்?

*யாழ்ப்பாணம்.* **- வேந்தன்.**

# மரண அறிவித்தல்கள்

## கிட்டப்பா மணியம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டப்பா மணியம் அவர்கள் நேற்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி (மனோ) அவர்களின் அன்புக் கணவரும் றோகினிதேவி, குணராஜா, அருட்செல்வி, சதானந்தன், பத்மினி (யுறுக்குடியிருப்பு), சுரேஸ்குமார், குமுதினி, மோகன்ராஜ் (யா/ மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் மணி, மலர், மல்லிகா, யோகம்(ஹொலண்ட்), காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் வவா, சோதிலிங்கம், சோதியம்மா (ராணி), சிவாநிதி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23-5-2001) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் 6/12, விதானையார் லேன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ம சதானந்தன் (மகன்)

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(88118)

## திருமதி கார்த்திகேசு இராசம்மா

சாவகச்சேரி வடக்கு மடத்தடி கிழக்கு ஒழுங்கையை சேர்ந்த திருமதி கார்த்திகேசு இராசம்மா (20-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24-5-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் உரும்பிராய் வடக்கு கற்பகப் பிள்ளையார் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இலந்தைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. தர்மலிங்கம் (துரை)
(மருமகன்)

உரும்பிராய் வடக்கு,
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய்.
(88125)

## திருமதி கமலாம்பாள் ராமையாப்பிள்ளை

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி கமலாம்பாள் ராமையாப்பிள்ளை நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ராமையாப்பிள்ளையின் அன்பு மனைவியும் தர்மாவதியின் அன்புச் சகோதரியும் கோகிலம், சரோஜா, முருகானந்தம், எத்திர்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், முருகேசு கந்தையா, சீதாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதாம்பாள், ஜெபலட்சுமி, சுகுமாரன், வசந்தி, ஸ்ரீகந்தராஜ், நாகராஜ், கலாதேவி உமாதேவி, சந்திரகலா, ஸ்ரீ லட்சுமி பிரேம்குமார், சக்திவேல், பத்மநாதன், மனோராஜ், ராமஜெயம், மகேஷ், சுவர்ணா, கிருஷ்ணகுமாரி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சர்மிலா, சஜித், கிஸ்கின், துஷ்யந்தன், விதுர்சனா, வசிகரன், வைத்தியாஷினி, ஷாம்பவி, மதுமிதா, சுஷந்தன், கோபிநாத், தட்சணா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-5-2001) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் (பாற்பண்ணை முன்பாக) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீகந்தராஜ்
(பேரன்)

164, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி
(88124)

## திருமதி குமாரசாமி தெய்வானை

(பேராலை, பளை)

பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது புலோலி தெற்கில் வசித்தவருமாகிய திருமதி குமாரசாமி தெய்வானை நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்புமனைவியும் சுப்பிரமணியம், சண்முகம் (கனடா), குமாராணி, ஞானமலர், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி, செல்வராணி உலகநாதன், சேதுகாவலர், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-05-2001) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கோ. சேதுகாவலர்
(மருமகன்)
இலங்கை வங்கி 2ஆம் கிளை
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

புலோலி தெற்கு,
கொடிகாமம் றோட்,
மந்திகை,
புலோலி.
(88127)

## ஆசிரிய மாணவர் சம்பளம்

யாழ்ப்பாணம், மே 23

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களின் இந்த மாதத்துக்கான சம்பளம் இன்று பிற்பகல் 3 மணி முதல் கலாசாலையில் வைத்து வழங்கப்படும் என்று கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (க-3)

## புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 23

தீவக கல்வி வலயத்தில் புத்தாயிரமாண்டு ஜி.சீ.ஈ. (உ/தர) மாணவர்களுக்கான ஜனாதிபதி 'சகச்சிர' புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 10.30 மணிக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில்வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி.குகேந்திரனும் கலந்து கொள்வர் (க-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 23

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் கசிப்புப் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு இன்று மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (க-3)


லஷ்சுமி
இணுவில்
கார்த்திக், லைலா, மனோரமா, தாமு நடிப்பில்
ரோஜாவனம்
(ரீல்ஸ்)
தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.00
(புதிய நேரம்)
27ஆம் திகதி மட்டும்
(சி-16818)

நாகஸ்ஸ்
சுன்னாகம்
எம். ஜி. ஆர். (இரு வேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார் நடித்த
எங்கவீட்டுப்பிள்ளை
(ரீலஸ்)
தினசரி: 11.00, 2.30
(புதிய நேரம்)
சனி, ஞாயிறு 6.00
(விசேட காட்சி)
(88116)

ராஜா
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயானி மற்றும் பலர் நடிப்பில்
பாட்டாளி
காட்சிகள்: 10.30, 2.30
(புதிய நேரம்)
25-05-2001 முதல்
உன்னைக் கொடு என்னைத் தருவேன்
காட்சிகள் தினசரி:
10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு:
10.30, 2.30, 5.00
(புதிய நேரம்)
(சி-16664)


# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர்

திரு. ஆ. சுப்பிரமணியம் அவர்களின்
அன்புத் தந்தையார்

## வேலுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்கள் 19-05-2001 சனிக்கிழமையன்று சிவபதம் அடைந்ததையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட மாணவர்கள்
முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(88119)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சந்தனராஜா

(சின்ராசன்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்தனராஜா நேற்று முன்தினம் (21-5-2001) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை நல்லம்மாவின் அன்பு மகனும் சின்னையா இலட்சுமியின் அருமை மருமகனும் பத்மாசனியின் அன்புக் கணவரும் சந்துருவின் பாசமிகு தந்தையும் சௌவுந்தராசா, சேனாதிராசா, பத்மராணி, செல்வராணி ஆகியோரின் சகோதரனும் சண்முகநாதன், செல்வரெத்தினம், சற்குணராஜா, சிவரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸ்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி சு. செல்லம்மா
(மாமியார்)

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு
(88123)

## சபாரட்ணம் நடராசா

(முன்னாள் உதவி முகாமையாளர், வர்த்தக வங்கி)

அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சபாரட்ணம் நடராசா நேற்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சபாரட்ணம் - செல்லமுத்து ஆகியோரின் புதல்வரும் பார்வதியின் அன்புக் கணவரும் சோமஸ்கந்தராசா (போல்சன் இன்டஸ்றீஸ், கொழும்பு), நந்தினி (ஆசிரியை, யா/ அராலி சரஸ்வதி ம.வி ), நித்தியகுமார் (பிறீமா கோப்பிறேசன், திருகோணமலை), நளினி (கனடா), இராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகா (டெல்மன் வைத்தியசாலை, கொழும்பு), ஜெயக்குமார் (அதிபர், யா/ தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), நவலட்சுமி (டாக்டர், ஆயுள்வேத வைத்தியசாலை, வெள்ளைமணல், திருகோணமலை), குலசிங்கம் (கனடா), இரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் டிலக்சன், துபன், யகுலன், கஜானன் ஆகியோரின் பேரனாகும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 'அற்புதவாசா', அராலி வடக்கு இல்லத்தில் நாளை (24-05-2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந, பார்வதி (மனைவி)

அராலி வடக்கு,
அராலி.
(88128)

## இளையதம்பி சுப்பிரமணியம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது புதுக்குடியிருப்பில் வசித்தவருமாகிய இளையதம்பி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருளம்மாவின் அன்புக் கணவரும் துவாரகாதேவி (U.K.) ஜெகநாதன் (ஜெகன் போட்டோ-யாழ்), காலஞ்சென்றமோகநாதன், யசோதரா (U.K.), காலஞ்சென்ற சுபலதா, சத்தியநாதன் (இந்தியா), சிவலோகநாதன், குகநேசன் (U.K.), மகிழ்நேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசாமி, லலிதாம்பிகை, பிறேம்குமார், குகமாலா (இந்தியா), ஆகியோரின் மாமனாரும் சிவசாயி (U.K.) சாம்பாணியல் (U.K.), பரணிதரன், பைரவி, வினோத் ஆகியோரின் பேரனும் பொன்னையா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானேஸ்வரி (இந்தியா), இராசம்மா, மகேஸ்வரி (கனடா), அருமலர், வேலும்மயிலும், அல்லிமலர் (இந்தியா), திரவியநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-5-2001) புதன்கிழமை புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஜெகன் (மகன்)

பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(சி/16815)

## உதயன்

### மறைமுகச் சித்திரவதை

சமாதானப் பேச்சுக்களில் தாம் பங்கு கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள மூன்று முன் தேவைகளில், தமது கட்டுப் பாட்டில் உள்ள பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடையை - பொரு ளாதாரக் கட்டுப்பாடுகளை - நீக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைத் தானும் முழுமையாக நிறைவேற்றுவதற்கு இயலாதவாறு பொருளாதாரத் தடை அமுலாக்கப்பட்டு வந்தது. பேச்சு வார்த்தைக்கான அரசின் முன் னோடி நல்லெண்ண நடவடிக்கை யாக சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னர் பொருளாதாரத் தடை - கட்டுப்பாடுகள் - சிறிது தளர்த்தப் பட்டன. எனினும் பல அத்தியாவசிய பொருள்கள் பட்டியலில் சேர்க்கப்பட வில்லை!

பொருளாதாரத் தடை முழு அள வில் அமுலில் இருந்த வேளை, வன்னிக்குச் சென்று திரும்பிய பல சமூக, சமயத் தலைவர் அங்குள்ள மக்கள் படும் கஷ்டங்களை எடுத் துச் சொன்னார்கள். மருந்து, உணவு உட்பட்ட பல பொருள்க ளின் தட்டுப்பாட்டால் அவர்கள் இன்னற்படுவதை விவரித்தார்கள்.

மனிதாபிமான ரீதியிலேனும், அப் பகுதி மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் எனக் கருதியேனும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு அரசுக்குப் பகிரங்க வேண்டுகோள்கள் விடுத்திருந்தனர்.

அப்பிரதேசங்களின் - மக்களின் - பாதிப்புற்றநிலை வெளிக்கொணரப் படும் போதெல்லாம், அவர்களின் சகல தேவைகளையும் அரசு நிறை வேற்றியே வருகிறது என்று காட்ட முனைவது உண்டு. குறிப்பிட்ட மாதத்தில் இத்தனை "லொறி லோட" உணவும் மருந்தும் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டன; முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டன; அங்குள்ள அதி காரிகள் தந்த தேவைப் பட்டியல் களின் பிரகாரமே அவை அனுப்பப் பட்டன; என்று அரசாங்கம் புள்ளி விவர அறிக்கைகளை வெளியிட்டுத் தன்னிடம் தவறு ஏதும் இல்லை என்று காட்டிக்கொள்ளும்!

ஆனால் இந்த இரண்டு மாவட் டங்களின் அரசாங்க அதிபர்கள் யாழ்ப்பாணம் வந்த வேளை வெளி யிட்ட சில தகவல்கள் அதிர்ச்சி தரு வனவாக உள்ளன. போர் கார ணமாக இரண்டு மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண் ணிக்கை 61 ஆயிரமாகும். ஆனால் அவற்றில் 27 ஆயிரம் குடும்பங்க ளுக்கு மட்டுமே இடம்பெயர்ந்தோ ருக்குரிய உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது. மிகுதி 34 ஆயிரம் குடும்பங்களுக்குக் குறிப்பிட்ட நிவா ரணம் மறுக்கப்பட்டுள்ளது!

இடம் பெயர்ந்த மக்கள் சொந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாயி னும் சரி, யாழ்ப்பாணம், திருகோண மலை போன்ற பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாயினும் சரி, அவரவர் தொழில்களை இழந்திருப்பர். வேறு வகை வருமானத்துக்கும் வாய்ப் பில்லை. உலர் உணவு நிவாரணம் கிடைக்காவிடில் அவர்களின் நாளாந்த வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதனை எவரும் பரி தாப சிந்தையுடன் உணர முடியும். மனிதாபிமானமுள்ள எவரும் அவர்க ளின் நிலை குறித்து இரக்கம் கொள் ளவே செய்வர்.

ஆனால் அரசாங்கம் இரக்கமோ, மனிதாபிமானமோ இல்லாத இரும்பு இயந்திரமாகச் செயற்படுகிறது. விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு பொருள்க ளைத் தாராளமாக அனுப்பினால் அவற்றில் பெரும் பகுதி புலிகளுக்கே போய்ச் சேரும் என்று அரசு காரணம் காட்டி வருகிறது.

அரசின் இத்தகைய செயல்கள் தமிழ் மக்களை மறைமுகமாகச் சித்திரவதை செய்வதற்கும் அழிப் பதற்குமே வழி செய்யும். இனியாவது அரசு உணரவேண்டும். தனது தவ றைத் திருத்திக் கொள்ளட்டும்.

பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தின்

# பாவனையில் உள்ள காணியை சுவீகரித்துத் தரக் கோரிக்கை

சுழிபுரம், மே23

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தற்போது விளை யாட்டு மைதானமாகப் பாவனையில் இருக்கும் காணியை பாடசாலையின தேவைக்காக சுவீகரித்துத் தருமாறு கோரி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட் டுள்ளது.

மேற்படி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றிணைந்து இந்த ஊர்வலத்தை நடத்தினர்.

வலி. [illegible] பைக்கு ஊர்வலமாகச் சென்ற இவர்கள் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோக நாதனிடம் இது குறித்துப் பிரஸ்தா பித்தனர்.

விளையாட்டு மைதானத்தில் தற் போது நடைபெற்று வரும் கட்டட வேலைகளை நிறுத்த ஆவன செய் யுமாறும் அவர்கள் பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து உரிய நடவடிக்கை களைத் தான் உடன் எடுப்பதாக அவர் உறுதியளித்தார். (ம-7-28)

# பளை [illegible] செயலக நடமாடும் சேவையில் 2 ஆயிரம் மக்களுக்குப் பயன்

தென்மராட்சி,மே23

கிளிநொச்சி மாவட்ட செயலகத் தினால் அண்மையில் புலோலியில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பெரும்பாலான மக்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டைகள் பெறுவதற்கான விண் ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

பளைப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள மாணவர்களின் நலன் கருதி அவர்கள் கல்வி கற்பதற்கான தற்காலிகக் கொட்டகைகள் அமைக் கவும், தளபாடங்கள் வழங்கவும் நட வடிக்கை எடுக்குமாறு கோரி பளைப் பகுதிக்கான கோட்டக் கல்விப் பணிப் பாளர் அ.கயிலாயபிள்ளை இந்தச் சேவையின் போது கிளிநொச்சி அர சாங்க அதிபர் இ.ஐயாத்துரையிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தார்.

இந்தச் சேவையின் போது அஞ் சல் திணைக்களத்தினால் 17 மாண வர்களுக்கான அஞ்சல் அறிமுக அட் டைகள் வழங்கப்பட்டன.

சுகாதாரத் திணைக்களத்தினால் 260 குழந்தைகளுக்கு "வேர்மக்ஸ்" பூச்சிகொல்லி மாத்திரைகளும், 165 குழந்தைகளுக்கு மீன் எண்ணைக் குளிசைகளும், 185 கிணறுகளுக்குப் பாவிக்கவென குளோரின் பவுடரும் வழங்கப்பட்டன.

பளைப் பிரதேச செயலகம் மூலம் கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கப் பட்ட 300 பேரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை அரச அதிபர் இஐயாத் துரை உரியவர்களுக்கு இங்கு எடுத்து வந்து விநியோகித்தார். (ம-7-117)

இதேவேளை -

### தடை தாண்டல் பரீட்சை

வலி.வடக்கு,மே23

சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர்களுக்கான தடை தாண்டல் பரீட்சை அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் பிர தேச செயலகங்களுக்குரிய அமைச் சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒரு வருட கால திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவர்களும் பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர் களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-86)

### தாச்சிப் போட்டி

வலி வடக்கு,மே23

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஸ்ரீ வராகி விளையாட்டுக் கழகம் நடத் தும் தாச்சி சுற்றுப் போட்டியில் பெண்களுக்கான இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வராகி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டத்தில கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சுன்னாகம் வளர்பிறை விளை யாட்டுக் கழக அணி (ம-86)

# உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிர தேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமையாற்றும் உள் ளூராட்சி உதவியாளர்களுக்கான சந் திப்பு ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கென திருகோண மலையில் நடத்தப்படவிருக்கும் வதி விடப் பயிற்சி நெறி குறித்து ஆரா யப்படும் என உள்ளூராட்சி உதவி யாளர் சங்கத் தலைவர் அறிவித் துள்ளார். (ம-7-185)

### நாளை

வைகாசி 10
வியாழக்கிழமை
திதி: பிரதமை
காலை 7.47 வரை
நட்சத்திரம்: ரோகிணி
நண்பகல் 11.45 வரை
கற்கி ஜெயந்தி தினம்
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம் : 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

### காட்சி அறை திறப்பு

நவாலி,மே23

யாழ்.மாவட்ட தொழிற்றுறை திணைக்களத்தால் யாழ்.மாவட்டச் செயலகத்தில் காட்சியறையும் விற்பனை நிலையமொன்றும் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள் ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப் பட்ட தரமான புடவை வகைகள், இங்கு காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுமென்று தெரிவிக்கப்படு கிறது. (ம-100)

### உதயவாக்கு

நல்லவன் என்று பெயரெடுக்க அதிக காலம் எடுக்கும்.

### நாட்டு நடப்பு

நல்லூர் வீதியிலோர் குட்டி
நல்ல நிறம், கண், காது, மூக்கு!
மெல்ல மெல்ல எல்லோரும் பார்க்க
மெதுவாய் அணையுதடா என் பக்கம்
நல்லபடி கட்டிக்கொண்டு நான் போனால்
நாலுதை தருவாளடா நல் அம்மா பாட்டி
செல்லர் வீட்டு பொமனேரியன் என்று
சிவனேசன் இழுத்துக்கொண்டு போறான்.

- மு.திருநாவுக்கரசு.

அருகிவரும் குதிரையினம் குறித்து ஆராய

# மாகாண அதிகாரிகள் குழு நெடுந்தீவுக்கு இன்று விஜயம்

யாழ்ப்பாணம், மே23

நெடுந்தீவுப் பகுதியில் குதிரை யினம் அருகி வருவது குறித்து ஆராயவென வடக்கு - கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இன்று அங்கு விஜயம் செய்யவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கால் நடை அபிவிருத்தி, சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ஆர்.எஸ்.நவரட்ணம் மேற்படி திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.இராமநாதன் மற்றும் தீவுப்பகுதிக்கான மிருக வைத்திய அதிகாரி ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

இந்தக் குழுவினர் நெடுந்தீவின் சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்து குதிரைகளின் பெருக்கம், அவற்றைத் தாக்கும் நோய்கள், நோய்களைக் கட்டுப்படுத்துவதற் கான வழிமுறைகள் குறித்து ஆராய் வர்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாய கம், நெடுந்தீவு மற்றும் ஊர்காவற் றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல் வநாயகம் ஆகியோர் இந்த விஜயத் துக்கான ஏற்பாடுகளைச் செய்துள் ளனர். (ம-7)

# ஏனைய பகுதிகளிலும் மீளக் குடியமர கொழும்புத்துறை மக்கள் விருப்பம்

## கலந்துரையாடலில் தெரிவிப்பு

அரியாலை,மே23

கொழும்புத்துறை பிரதேச மக் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்து ரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலந்தைக்குளம் விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.



கொழும்புத்துறை மக்களின் பிரச்சினைகள் குறித்த கலந் துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் உரை யாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். இலந்தைக்குளம் வீநாயகர் ஆலயத் தலைவர் க.செந்தில்குமரனும் அருகில் காணப் படுகின்றார்.

கலந்துரையாடலில் பங்கு கொண்ட பொதுமக்களை இரண் டாவது படத்தில் காணலாம்.



படங்கள்: அரியாலை நிருபர்

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கலந்துரையாடலில் பங்கு கொண்ட பலரும் கொழும்புத்துறைப் பகுதி யில், பொதுமக்கள் மீளக் [illegible] போதிலும் அவர்களுக்கா[illegible] டைத் தேவைகள் நிறைவு[illegible] தரப்படவில்லை என்றும் -

கொழும்புத்துறையில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதி களில் மக்கள் மீளக்குடியமர அனு மதி பெற்றுத்தர வேண்டுமெனவும்-

மூடப்பட்டுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களைத் திறந்து பூசை வழி பாடுகளை நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என் றும்-

கோரிக்கைகளை முன்வைத்த னர்.

இதற்குப் பதிலளித்த வலி.மேற் குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரி லோகநாதன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இவை குறித்துப் பிரஸ்தாபித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.(ம-7-17)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அத்தியடிச் சம்பவம்:

# மேலும் இரு மாணவர் நேற்று பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர்

அத்தியடிப் பகுதியில் அண்மையில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இரு மாணவர்கள் நேற்றுப் பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த இருவரையும் மற்றும் ஏற்கனவே இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மாணவனையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்வதற்கு அனுமதித்த நீதிவான் இ.த. விக்னராசா அவர்களை இம்மாதம் 30 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

அதேவேளை மூன்று விடயங்கள் தொடர்பாகக் குறிப்பிட்ட மாணவர்கள் நீதிமன்றுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிவான் அவர்களுக்கு அறிவுரையும் வழங்கினார்.

நீதிமன்றுக்குத் தாம் திருந்தி விட்டதாக உறுதிப்படுத்தவேண்டும் -

எதிர்காலத்தில் கல்விச் செயற்பாடு தவிர எந்த விடயங்களிலும் ஈடுபடுவதில்லை -

பெற்றோர், அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் கல்வியில் மட்டும் கவனம் செலுத்தவேண்டும் -

இந்த மூன்று விடயங்கள் பற்றி மாணவர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான ஏனைய மாணவர்களையும் நீதிமன்றில் உடனடியாக ஆஜர் ஆக்குமாறு குற்றத் தடுப்புப் பிரிவின் பொலீஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்ட மாணவர்களின் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (க-10)

## புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் பேச்சுக்களை அவசர அவசரமாக ஆரம்பிக்க வேண்டிய கட்டாய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதில் உள்ள தடைகளை - முட்டுக்கட்டைகளை - அகற்றுவது தொடர்பாக நாளை நடைபெறும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (க-3)

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்முனைப் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய டி.வீரரத்தின என்ற கான்ஸ்டபிளே இரவுக் கடமை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் சூட்டுக்குப் பலியானார்.

இதனை அடுத்து நகரப் பகுதியில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது. (க-6)

## பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழந்தார். இரு பஸ்களிலும் பிரயாணம் செய்த சுமார் நூறு பேர் காயமடைந்தனர்.

தனியார் கடுகதி பஸ்ஸும் போக்குவரத்துச் சபை பஸ்ஸுமே விபத்துக்குள்ளாகின.

குளியாப்பிட்டியைச் சேர்ந்த எம்.ஆர். லக்தாச என்ற இராணுவ கோப்ரலே உயிரிழந்தார்.

காயமடைந்த 100 பயணிகளில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் -

குருநாகல், கண்டி, கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர். (க-6)

## அதிகாரிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியே அவரவர் அவசர அலுவலகத் தேவையின் பொருட்டு அனுப்பப்பட்டனர். அவர்கள் அனைவரும் அரசாங்க அதிகாரிகள்; அவர்களிடம் வித்தியாசம் காண்பிக்க வேண்டிய தேவையில்லை - என்று கேணல் பண்டார குறிப்பிட்டார்.

"தமிழ் அதிகாரிகளுக்கு நேர்ந்த கதி" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஈ.பி.டி.பியின் சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராஜா அனுப்பிய அறிக்கையில்-

கொழும்பிலிருந்து வந்த சிங்கள அதிகாரிகளில் பத்துப்பேர் நேற்று வரை திரும்பிச் செல்லாமல் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

அவசர காரணங்களுக்காக உடனே கொழும்பு திரும்ப வேண்டிய சில அதிகாரிகள் மட்டும் விமானப் படையின் சேவையில் திங்களன்று அனுப்பப்பட்டார்கள். அவர்களில் தமிழ், சிங்கள அதிகாரிகள் இருசாராரும் [illegible]ங்குவர் - எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் ஒன்பதாம் நாள் இன்று (23.05.2001.) புதன்கிழமை பகல் 1.52 மணி முதல் 3.28 மணி வரை வரும் கன்னி லக்கினமும் ரேரகிணி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சுபாஸ்சந்திரன்**
அவர்களுக்கும்



எமது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**மகாதேவி**
அவர்களுக்கும்

இறைவனின் திருவருள் துணைகொண்டு
தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி தேவஸ்தானத்தில்
திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு.திருமதி அ.திருஞானசம்பந்தர்**
*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*

**திருமதி கனகம்மா அரியகுட்டி**
*வாகையடி மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி,*
தற்காலிக முகவரி:
*வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,*
*தாவடி தெற்கு, கொக்குவில்.*

(C/16820)




உ

வளமாக வாழ்க என

### உளமார வாழ்த்துகின்றோம்

23.5.2001 புதன்கிழமை நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மாள் ஆலய மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்தை முன்னிட்டு மணமக்களை மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

மணமகன்
திருநிறை செல்வன்
**பிரதீபன்**



மணமகள்
திருநிறை செல்வி
**சுகந்தினி**

சீர் பரவு கோண்டாவில் சிறப்புமிகு பதி தன்னில்
ஊர் பரவு முத்தமராம் ஜெயராசா பெற்றெடுத்த இளவல்
பார்புகழும் செல்வன் பக்தியுடைத்தமி சுகந்தினியெனும்
கார் குழலாளைக் கரம் பிடித்தான் காப்பாய் கணபதியே!

**மணமகனே!**
இல்லற வாழ்வினில் இனிது புகும் சோதரனே.
நல்லறமாகவே நடத்திடுவீர் வாழ்வதனை
சொல்லறம் மிக்க சோதியாம் சுகந்தினியுடன்
பல்லறஞ் செய்து பண்புடனே வாழ்ந்திடுவீர்

**மணமகளே!**
அன்னநடை மடவாளே அன்புடைய மாதே
பண்பின் கருவூலமே பாரெல்லாம் புகழ் விளங்க
நண்பன் பிரதீபன் வாழ்வில் நலமுடனே இணைந்து
இன்பமுடன் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றோம்

**மணமக்களே!**
நல்ல குடும்பமோர் பல்கலைக் கழகமெனவே
வல்ல புலவர்கள் வாய்மொழிந்தார் முன்னாளில்
எல்லாம் வல்ல கற்புலத்து மனோன்மணி அருளாலே
பொல்லா வினை நீக்கிப் புகழுடனே வாழ்க வாழ்க

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நீடூழி வாழ்க.

**வாழ்க மணமக்கள் !!**

- நண்பர்கள்,
ஹரிஹரனன் பிறின்டேர்ஸ் யாழ்ப்பாணம்.



## முதலாம் ஆண்டு நினைவுச்சுடர்

மண்ணகத்தில்
08
-
03
-
1916



விண்ணகத்தில்
03
-
06
-
2000

பண்டிதர், வித்துவான்

**வி.நவரத்தினம் B.A. (Dip.In.Tamil)**

திதி : பிரதமை (23.05.2001)

தமிழாய், தமிழுக்காய் வாழ்ந்த செம்மல்
தனையேயுருக்கி எமை வாழவைத்த தெய்வம்
விழியின் இமையாய் காத்த தந்தை
வளமார் வழிகள் காட்டிய தலைவன்
உளமோ உங்கள் நினைவால் சுடரும்
உளமே குலைந்து தவிக்கிறோம் ஓராண்டாய்
பலமாய் என்றும் எங்கள் பக்கத்திருப்பீர்
நிலவாய் குளிரும் உங்கள் நினைவென்றும்!

*தங்கள் ஆத்மா சாந்தி பெறுக.*

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*'அ[illegible] இல்லம்',*
*[illegible]டாவில் கிழக்கு,*
*கோ[illegible]ண்டாவில்.*
(C/16814)

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி

அறிஞர் பலர் தோன்றத் தமிழ்தந்த பேராசானாய்
தமிழ் மொழிக்குப் பெருமை தந்த தமிழறிஞனாய்
கவித்திறத்தால் காவியம்பல படைத்த கவிஞனாய்
கத்தோலிக்க கலையுலகின் கலங்கரை விளக்காய்

எமது மன்றத்தின்
கலைக்குரலாய், ஆலோசகனாய்
ஆஸ்தானக் கவிஞனாய்
பக்திமிகு மனிதனாய், பண்புமிகு மனிதனாய்
வாழ்ந்து சென்ற



**அமரர் ம.விக்ரர்**
**'யாழ்.ஜெயம்'**
அவர்களின்
மறைவுச் செய்திகேட்டு
ஆறாத் துயரடைந்துள்ளோம்.

அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்கி, அவரின் ஆன்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/16800) - **திருமறைக் கலாமன்றம்.**



## தேவை

Computer இல் Type Setting செய்யக் கூடியவர்கள் தேவை.

தொடர்பு கொள்ளவும்:

**UNIVAC**
1201, K.K.S.ROAD, JAFFNA.

(88063)



**எமது புதிய Video CD வெளியீடுகள்**

- சிஹாமணி ரமாமணி
- அசத்தல்
- அவள் பாவம்

**மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்**
288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.3646

புதிய வீடியோ போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.

(88114)



**எமது இன்றைய வீடியோ CD வெளியீடுகள்**

'விசு'வின்
- சிஹாமணி ரமாமணி
- விண்ணுக்கும் மண்ணுக்கும்

(FIVE STAR ஒறிஜினல்) பிரதிகள் உடன் பெறலாம்.

அடுத்த வெளியீடு

சூப்பர் ஸ்ரார் ரஜனியின்
- அழகேஸ்வரன்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(C/16816)



## ஈராண்டு நெஞ்சகலா நினைவலைகள்

நெஞ்சமது
மகிழ
1978
-
12
-
12



நெஞ்சமது
நெகிழ
1999
-
05
-
16

**செல்வி நவரத்தினம் அமிர்தா**

திதி: 23-05-2001 பூர்வபக்ஷ பிரதமை

அமிர்தாவே! எங்கம்மா நீ சென்றாய்?
ஏனெம்மைத் தவிக்க வைத்தாய்?
ஈராண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துன்பம்!
பல்கலைக் கனவுகளின் நிறங்களில்
அமிழும் உன் கணங்கள் மீது
மரணம் காத்திருந்ததையோ!
பாவிகள் விரித்த வலைகளிலே
அப்பாவி... நீயேன் மாண்டுவிட்டாய்!
ஏவிய பேய்கள் சிரித்து நிற்க - நீ
ஆவிகள் உலகம் சென்றுவிட்டாய்!
இன்பமதை எய்தி எம் துயர்துடைக்க வந்தவளே!
கண்விழித்துக் காத்திருப்போம் - கண்மணியே!
நீ மீண்டும் சிரித்தபடி வருவாயென!

*பொற்கலந்தம்பை,*
*தெல்லிப்பழை.*
(88097)

உன் பிரிவால் துயருறும்
அன்பு அம்மா


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.